விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 17 ஞாயிற்றுக்கிழமை (03.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 319

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## வீடு புகுந்து வாள் வெட்டு 6 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அந்தக் குடும்பத்தினரின் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் யாழ். சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் கோவில் பகுதியிலுள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்டவர்களினால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தீபாவளிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர் குழுவொன்று அப்பகுதியிலுள்ள தோட்டத்திற்குள் சென்று மது அருந்திக்கொண்டு இருந்துள்ளனர். இந்நிலையில் அதனைத் தடுக்கச் சென்ற அத்தோட்டத்தின் உரிமையாளரான

23ம் பக்கம் பார்க்க

## வலுத்தது தமிழகத்தில் எதிர்ப்பு

# டில்லிப் பயணத்தை நிறுத்தினார் கோத்தபாய

**இலங்கையில் வரும் 15-17ஆம் திகதிகளில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்பதற்கு கடும் எதிர்ப்பு வலுத்து வருகிறது. இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது இந்தியப் பயணத்தை ரத்து செய்துள்ளார்.**

**பயணத்தை ரத்து செய்யுமாறு அவரை மத்திய வெளியுறவுத் துறை நட்புரீதியில் கேட்டுக்கொண்டதாக டெல்லி அரசியல் வட்டாரங்கள் கூறின.**



இந்த மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்கக் கூடாது எனத் தமிழகத்தின் பல்வேறு கட்சிகள், பொதுநல அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. கடந்த வாரம் தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், மாநாட்டில் இந்தியா பங்கேற்கும் என அறிவித்திருந்தார்.

இதை அடுத்து தமிழக சட்டப் பேரவையில் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என தீர்மானமே நிறைவேற்றப்பட்டது.

கடந்த புதன்கிழமை டெல்லியில கூடிய காங்கிரசின் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் இந்தியா கலந்து கொள்ள முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாயின.

இது குறித்து பிரதமரை சந்தித்த மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசன், பிரதமரை அவரது இல்லத்துக்கே சென்று சந்தித்தார்.

24ம் பக்கம் பார்க்க

## வீதி புனரமைக்கப்படாமையைக் கண்டித்து விரைவில் கவன ஈர்ப்புப் போராட்டம்

### மண்டைதீவு பொது அமைப்புகள் ஏற்பாடு

(மண்டைதீவு)

மண்டைதீவையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பிரதான வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் இருப்பதைக் கண்டித்து, மண்டைதீவுப் பொது அமைப்புக்களால் கவனஈர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

கடந்த பல வருடங்களாக புனரமைக்கப்படாத மண்டைதீவு பிரதான வீதி இப்போது மக்கள் பயணிக்க முடியாத அளவில் பலத்த சேதம் அடைந்துள்ளதுடன் கடல் நீர், வீதியை மேவிப் பாய்கிறது.

மாரி காலம் ஆரம்பமாகும் இவ்வேளையில் குறித்த வீதியின் பாலங்கள் உடைந்திருப்பதால் மண்டைதீவிற்

23ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி வலி. வடக்கில் வீடுகள் உடைப்பு

### நிறுத்தும் உத்தரவு கிடைக்கவில்லை என இராணுவம் பதிலளிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவினை மீறி நேற்றும் யாழ். வலிகாமம் வடக்கில் பொது மக்களுடைய வீடுகள் இராணுவத்தினரால் இடிக்கப்பட்டதாக வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

வீடுகள் இடிக்கப்படுவது அரச உயர்மட்டத்திலிருந்து தமக்கு வழங்கப்பட்ட பொறுப்பு எனவும் இதனை நிறுத்துமாறு இதுவரையில் எந்தவிதமான அறிவித்தல்களும் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் இராணுவ அதிகாரியொருவர் தனக்கு கூறிய தாக பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயம் என்று இராணுவத்தினரால் வேலி போடப்பட்டுள்ள வலிகாமம் வடக்கு பகுதிக்குள்ளடங்கும் கட்டுவனில் கடந்த ஒருவாரகாலமாக புல்டோசர் வாகனத்தின் உதவியுடன் வீடுகள் இடிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், ஜனாதிபதியுடன் குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் இதனையடுத்து வீடுகள் உடைக்கப்படுவதை நிறுத்து

24ம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாடு

# இந்தியாவின் பங்கேற்பு முக்கியம் - நாயுடு



இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்து கருத்து தெரிவித்துள்ள அவர், "பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பது தொடர்பாக காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழக மக்களின் மன நிலையையும், வெளியுறவுக் கொள்கையையும் கருத்தில் கொண்டு முடிவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இது போன்ற மாநாடுகளில் பங்கேற்பதன் மூலம்தான் நமது கருத்தை வலியுறுத்த முடியும்.

இலங்கைத் தமிழர்கள் உரிமை பெற அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். அதற்கு பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பது முக்கியமானது" என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-8)

## பிரிட்டன் தமிழர்கள் போராட்டம்

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டுக்கு செல்லக்கூடாது என்று கோரி அங்கு வாழும்தமிழர்கள் நேற்று அவரது அதிகாரபூர்வ இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

பிரிட்டனின் ஊடகங்களில் இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து அதிகப்படியான ஆதாரங்கள் வந்துகொண்டிருக்கும் நிலையில் அங்கு செல்வதன் மூலம் பிரிட்டிஷ் பிரதமர் தனது கரத்தில் கறை படிய

24ம் பக்கம் பார்க்க

## இசைப்பிரியா படுகொலை இந்தியா கடும் கண்டனம்!

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி நிறுவனத்தில் செய்தி வாசிப்பாளராக கடமையாற்றிய இசைப்பிரியா உயிருடன் பிடிக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பிலான காணொளி ஆதாரத்தை பிரித்தானியாவைச் சேர்ந்த சனல் 4 தொலைக்காட்சி கடந்த வியாழக்கிழமை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், சென்னை கோபாலபுரம் இல்லத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியை நேற்றுச் சனிக்கிழமை இந்திய மத்திய அமைச்சர் சிதம்பரம் சந்தித்து பேசினார். இந்த சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "இசைப்பிரியா படுகொலை செய்யப்பட்டமை கண்டிக்கத்தக்க செயல். இலங்கையில் மனிதவுரிமைகள் மீறப்பட்டமைக்கு தகுந்த ஆதாரங்கள் உள்ளன. இந்த மனிதவுரிமை மீறல்கள தொடர்பிலான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் எதிர் கொள்ள வேண்டும்.

பொதுநலவாய அரசியல்தலைவர்களின் மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பது தொடர்பில் இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் காங்கிரஸ் கட்சியின் உயர்நிலைக்குழு முடிவு எடுத்ததாக வெளியான செய்தி தவறானது" என அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், கொழும்பில் இம்மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழக அரசியல் கட்சி

24ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சனல்-4 இன் புதிய வீடியோவுக்கு இராணுவப் பேச்சாளர் கண்டனம்

## மார்ச்சில் வேறு வெளியாகும் எனவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இசைப்பிரியா என்ற 27 வயது இளம்பெண்ணை இலங்கை இராணுவத்தினர் உயிருடன் பிடித்த பின்னரே, பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கி படுகொலை செய்துள்ளதாக, சனல் 4 புதிதாக வெளியிட்டுள்ள காணொளிச் செய்தியை இலங்கை இராணுவம் மறுத்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை நாங்கள் நிராகரிக்கின்றோம். அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் அவை. இசைப்பிரியா என்பவர் விடுதலைப் புலிகளின் ஆயுதப்பயிற்சி பெற்ற லெப்டினனட் கேர்ணல் தரத்திலுள்ள போராளி. புலிகளின் தொலைக்காட்சியிலும் தீவிரமாக இயங்கியவர் என்று எங்களுக்குத் தெரியும்.

ஒருபோதும் அவரோ வேறுயாருமோ உயிரோடு பிடிபடவில்லை. நாங்கள் உயிரோடு பிடித்த 12 ஆயிரம் பேர் வரையில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். ஒருபோதும் இசைப்பிரியா அவர்களுடன் இருக்கவில்லை என இலங்கை இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளதாக பி.பி.சி. கூறியது.

இசைப்பிரியா இராணுவத்திடம் உயிருடன் பிடிபடுகின்ற காட்சியையும் பின்னர் அவர் கொல்லப்பட்டிருக்கின்ற காட்சியையும் காட்டுவதாக சனல் 4 வீடியோ கூறுகிறதே என்று இராணுவப் பேச்சாளரிடம் பி.பி.சி கேட்டபோது,

அந்த வீடியோ உண்மையானதா என்று நிபுணர்கள்தான் ஆராய்ந்து உறுதிப்படுத்த வேண்டும். நீங்கள் சொல்லுகின்ற வீடியோவில் அந்தப் பெண்ணைத்தான் காட்டுகிறார்களா அல்லது யாரையாவது நடிக்க வைத்திருக்கிறார்களா என்று எங்களுக்குத் தெரியவில்லை. இது நடிப்பாகக் கூட இருக்கலாம். இந்த வீடியோவை தொழில்நுட்ப ரீதியில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த வீடியோ ஒரு நாடகம் என்றுதான் நாங்கள் கருதுகிறோம் என்றார் ருவன் வணிகசூரிய.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது நடந்ததாகக் கூறப்படும் பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பான காணொளிகளை சனல் 4 கடந்த நான்கு ஆண்டுகளாக வெளியிட்டுள்ளது

இதற்கு முன்னர் இவ்வாறான வீடியோ காட்சிகளை சனல் 4 வெளியிட்டிருந்த போது, அவை உண்மையானவைதான் என்று சுயாதீனமான நிபுணர்களை மேற்கோள்காட்டி சனல் 4 கூறியிருந்ததுதானே என்று கேட்டபோது, அவை பொய்யானவை என்றும் வேறு நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள் என்று இலங்கை இராணுவப் பேச்சாளர் வாதிட்டார்.

சனல் 4 தொலைக்காட்சி நிறுவனத்துக்கு உண்மையில் இந்தப் பிரச்சனை பற்றி தெரிந்து கொள்ளும் தேவை இருந்தால், இலங்கைக்கு வந்து அவர்கள் அதிகாரிகளின் கவனத்துக்கு அவற்றைக் கொண்டு வர முடியும் என்றும் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

சனல் 4 இந்த வீடியோவை பொதுநலவாய மாநாட்டை இலக்கு வைத்துதான் வெளியிட்டிருக்கிறது. நீங்கள் பொறுமையோடு இருந்தால் அடுத்த ஆண்டு மார்ச் மாதமளவில் இன்னும் ஒரு வீடியோவோ நிழற்



படமோ வெளியாகலாம். அதுதான் சனல் 4 இன் பழக்கம் என்று எல்லோருக்கும் தெரியும் என்று கூறிய இலங்கை இராணுவப் பேச்சாளரிடம், பிரிட்டனிலிருந்து இயங்கும் சனல் 4 நிறுவனம் எதற்காக இலங்கை அரசாங்கம் மீதோ இராணுவம் மீதோ பொய்யான குற்றச்சாட்டை முன்வைக்க வேண்டும்என்றுதமிழோசை கேள்வி எழுப்பியது.

அதற்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளர், இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும், இலங்கையில்தனிநாடு ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற பிரிவினைவாதிகளின் செயற்பாடுகள் சர்வதேச மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் போன்ற பல அமைப்புகள் இருக்கின்றன. யுத்த காலத்தில் அவர்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வாங்க பணம் கொடுத்தார்கள். இன்று அவர்கள் அந்தப் பணத்தை இலங்கைக்கு எதிரான பிரசாரங்களுக்காக செலவிடுகிறார்கள். தமிழ் பிரிவினைவாதிகளின் பணத்தின் பிடியில் சேனல் 4 சிக்கியிருக்கிறது எனக் கூறியதாக பி.பி.சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் இதற்கு முன்னர் சுமத்தியிருந்த இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் மறுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(எ-8)


**விற்பனைக்கு**

நம்பர் 1 நியூபேனார்ட், கிறீன் வலி (Green Valli) ஆகியகோழிக்குஞ்சுகள் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: செல்வரெட்ணம்**

**0778448295, 0776176370**

(சி-5351)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5310)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

நேற்றைய வலம்புரி பத்திரிகையில் 16 ஆம் பக்கத்தில் வெளியாகிய வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் 2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தலுடன் பின்வருவனவற்றை சேர்த்து வாசிக்கவும்.

1. கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட இரு பிரதிகளை தவிவாசளர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உள்ளூராட்சித் திணைக்களம் யாழ்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2014 ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணையின் மானிப்பாய் கிராம உப அலுவலக சாவக்கட்டுச் சந்தையின் விபரம்

| விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திர பணம் (NBT) தவிர | மீளளிக்கப்படும் கேள்விப் பத்திர பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (N.B.T) தவிற | மாதாந்த வாடகை (NBT) தவிர |
|---|---|---|---|---|
| சாவக்கட்டு சந்தை | 1000 | 5000 | 190850 | |

(சி-5336)


**மனோதத்துவ வைத்தியம்**

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

04.11.2013 முதல் 10.11.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மீண்டும் யாழில்

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-5323)



**குறைந்த கட்டணத்தில் 24 மணி நேர சேவை**

24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

Northern Central Hospitals

**நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்**



வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது.


இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

- கண் சத்திர சிகிச்சை
- காது மூக்கு தொண்டை சத்திர சிகிச்சை
- சகல விதமான பற்சிகிச்சைகள் Dentel Surgery (Orthodontic)
- சாதாரண மகப்பேறு, மகப்பேற்று சத்திர சிகிச்சை
- பொது சத்திர சிகிச்சை
- சிறு நீர் தொகுதி சத்திர சிகிச்சை, கற்கள் அகற்றுதல் உட்பட (Urology)
- நரம்பியல் சிகிச்சை (EMG, EEG, Sleep Disorders)
- லாபறஸ்கோப்பி (Laporoscopy)
- முறிவு தெறிவு , மூட்டுக்கள் சத்திர சிகிச்சை

342, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com

(சி/5252)

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு **உதாரணமாகும்!**

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**

**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

# மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க தமிழக தலைவர்கள் முன்வர வேண்டும்

## வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன்

(யாழ்ப்பாணம்)

**தமிழக மீனவர்கள் நடுக்கடலில் கொல்லப்படுவதையும் தாக்கப்படுவதையும் கண்டிக்கின்றேன். அதேவேளை, இழுவைப்படகுகளால் ஈழத்தமிழ் மீனவர்கள் முகம்கொடுக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்க்க ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்த தமிழக தலைவர்கள் முன்வர வேண்டும் என உரிமையுடன் கோருகின்றேன் என்று வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாணசபையின்மீன்பிடிமற்றும்நன்னீர் மீன்பிடி துறைசார் அமைச்சுப் பொறுப்பை (துறைசார் அமைச்சு ஆலோசகர்) கொண்டுள்ள துரைராசா ரவிகரன், தமிழக, ஈழத் தமிழர் மீனவர் பிரச்சினை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஈழத்தமிழர்களும் தமிழகத்தமிழர்களும் பல்லாயிரக்கணக்கான ஆண்டு கால கலாசாரத் தொடர்புகளைப்பேணி வருகிறோம்.

வரலாற்றின் பல அத்தியாயங்களின் சவாலுடன் சவடிய பக்கங்களை எல்லாம் வென்று இன்று, எமக்கிடை யேயான தொப்புள்கொடி உறவு என்றுமில்லாத வகையில் பின்னிப் பிணைந்து இருக்கிறது.

காலம் கண்டிராத மிகப்பெரும் அழிவைச் சந்தித்த நாம், அவ்வழிவில் இருந்து மீண்டும் எழுகின்ற இக்காலப்பகுதியில் தமிழக மக்கள், இளம் மாணவர்கள், அரசியல் தலைவர்கள் என்று பல தரப்பினரும் எம்மீது காட்டுகின்ற எல்லையற்ற அன்பைக்கண்டு பூரிப்படைகிறோம். தமிழர்களின் சரித்திரத்தின் சாதனைச் சாட்சியாக, இன்று நாம் வடமாகாணசபையைக் கைப்பற்றியிருக்கின்ற இந்நேரத்திலே, தமிழகத் தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் பொதுவான வாழ்வியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ள கடற்றொழில் பிரச்சினை தொடர்பில் பதிய ஆரோக்கியமான அணுகுமுறையைக் கையாள வேண்டிய தேவை எம்மைச் சார்ந்துள்ளது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் கடற்றொழிலையே நம்பி வாழ்கின்றன. 2003 இல் வடமாகாணத்தின் பொருளாதாரத்தில் 12 சதவீதமாக காணப்பட்ட மீன்பிடி, இன்று அண்ண ளவாக 3 சதவீதமாகவே உள்ளது. முன்னர் சராசரியாக ஒரு வருடத்தில் 250 நாட்களுக்கு மேல் மீன்பிடிக்கிற மீனவர்கள் இன்று கடல் வளங்களின் பற்றாக்குறையால், 70 இலிருந்து 110 நாட்கள் வரையே மீன்பிடிக்க முடிகிறது.

80களில் இலங்கையின் மொத்த மீன்பிடியில் 30% ஐக் கொண்டிருந்த யாழ்.மாவட்டத்தின் மீன்பிடி இன்று மிகவும் குறைவடைந்துள்ளது.

வடக்கில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கிற கடற்றொழில் இன்று கடும் சவாலைச் சந்தித்துள்ளது.

டிசெம்பர் முதல் பெப்ரவரி வரையான இறால் படுகை காலப்பகுதி இன்று முல்லைத்தீவு மாவட் டத்திலேயே சுமார் 10 இலிருந்து 15 நாட்கள் வரையே நீடிக்கிறது.

இவ் இறால் படுகை காலப்பகுதியின் இறால் பிடிப்பால், வருடம் முழுவதற்கும் தேவையான வருமானம் முன்னர் கிடைத்து வந்தது. ஆனால், இப்போது அந்த 3 மாத காலப்பகுதிக்குரிய வருமா னத்தைக்கூட ஈட்டமுடியாத நிலை நிலவுகிறது.

ஒருபுறம் தமிழக மீனவர்களின் அத்துமீறல். மறுபுறம் தென்னிலங்கை மீனவர்களின் அத்து மீறல். ஆனால், ஏராளமான அளவில் அத்து மீறுகின்ற தென்னிலங்கை மீனவர்கள் மீது சிறு நடவடிக்கைகள் கூட எடுக்கப்படாத நிலையில், தமிழக மீனவர்கள் மீது மட்டும் சட்ட நடவடிக்கை என்கிற போர்வையில் தாக்குதல் இடம்பெறுவது எவ்வகையில் நியாயம்? ஒரு தொகுதி தமிழக மீனவர்களின் இச்செயற்பாடுகளை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமாக தமிழக மீனவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இவ் அசௌகரிய சம்பவங்களையும், இழுவைப்படகுகளால் ஈழத் தமிழரின் வாழ்வாதாரத்திற்கு ஏற்படுகிற சேதத்தையும் தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான பேச்சுக்கள் அவசியமாகும். இப்பிரச்சினையை நாம் கவனிக்காது விடுவது எதிர்காலத்தில் இரு தரப்பு மீனவர்களிடமும் முரண்பாடு களை உண்டாக்கி விடுமோ என்று கவலையுறு கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

# வாரம் ஒரு தகவல்

## இளமை இதோ!

"தாத்தா, உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இளமை திரும்ப வேண்டும்! அதற்கு ஏதாவது மருந்து உங்களது கடையில் இருக்கிறதா?"

"அதற்கு டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறார்களாம் தாத்தா"

"அப்படியா? அது என்ன மருந்து?"

"கற்றாழையிலிருந்து தான் அந்த மருந்தை உருவாக்கியிருக்கிறார்கள்"

ஏற்கனவே காய்ச்சலைக் கட்டுப்படுத்த கற்றாழைச் சாறு கொடுப்பது வழக்கம்"

"ஆமாம் தாத்தா. அதேபோல் அல்சரையும் குணப்படுத்தும். கற்றாழையைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் வருவதில்லையாம். கொலஸ்ரோலும் இருப்பதில்லையாம். அதனால் இப்பொழுதெல்லாம் 'கற்றாழை டொனிக்' கே கடைகளுக்கு வந்துவிட்டது."

"அதைச் சாப்பிட்டால் நல்லது என்கிறாயா?"

"முதலில் எலிகளுக்கு இதைக் கொடுத்துத்தான் சோதனை செய்து பார்த்தார்களாம். அவற்றுக்கெல்லாம் இளமை தள்ளிப் போகிறது என்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள்."

"அப்படியா!"

"இப்பொழுதெல்லாம் அமெரிக்காவில் 'கற்றாழை சாலட்' கிடைக்கிறதாம்."

"நல்ல செய்தி கூறினாய் தம்பி, அது இருக்கட்டும். இப்பொழுது ரெடிமெட்டா உன்னிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா?"

"இந்த வயதில் இப்படி ஒரு ஆசை தேவையா தாத்தா உங்களுக்கு?"

"இது எனக்கில்லையப்பா. என்னுடைய அப்பாவுக்கு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

3.11.2013
(ஐப்பசி 17, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 7.40 மணிவரை
சுவாதி பின்னிரவு 12.23 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
அமாவாசை விரதம், கௌரிவிரதம்
மெய்கண்ட தேவர் குருபூசை

**மேடம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், போசன சுகமுண்டு, கௌரவமான நாள், மறக்க முடியாத சம்பவமொன்று நடைபெறலாம்.

**இடபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான நாள், முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பெருமைகள் வந்து சேர கணபதியை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**சிங்கம்** உறவு-பகை பாராமல் உதவும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் கைகூடும், மக்கள் போற்றும் வாழ்வமைய கண்ணனை வழிபட வேண்டிய நாள், பொருள் விரயங்கள் கூடும், வாக்கு மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**துலாம்** ஆழ்ந்த சிந்தனையுண்டு, திட்டமிட்ட காரியமொன்று நடைபெறாவிட்டாலும் திட்டமிடாத காரியமொன்று நடைபெறும், பயனங்களால் பலனுண்டு, பெரியவர்களின் சொல்லைக் கேட்டு நடப்பீர்கள்.

**விருச்சிகம்** வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், பிதா சிந்தையுண்டு, பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத சந்தோசங்கள் தோன்றலாம்.

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், பிறர் உதவியுண்டு, பொருளாதார நிலை உயர உரிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மகரம்** கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், அந்நியர் உதவியுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**கும்பம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள். தந்தைவழி உறவில் நன்மையுண்டு. பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** திடீர் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், போசன நன்மையுண்டு.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 130 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 120 |
| தக்காளி | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 60 |
| கோவா | 40 | 40 | 80 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 60 |
| வாழைக்காய் | 45 | .30 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 180 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 150 |
| பாகற்காய் | 240 | 110 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 30 | 70 |
| பயற்றங்காய் | 120 | 90 | 100 |
| லீக்ஸ் | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 40 | 40 | 100 |
| போஞ்சி | 120 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 25 |
| தேசிக்காய் | 300 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 - 50 |

# கிழக்கு மாகாணத்தில் இராணுவ ஆட்சி!

## அரியம் எம்.பி. தெரிவிப்பு; பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மறுப்பு

கிழக்கு மாகாணத்தில் இராணுவ ஆட்சி நடைபெற்வில்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த மாகாணத்தில் சிவில் நிர்வாகமே நடைபெறுகின்றது என அவர் குறிப்பிட்டார். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த கூட்டத்தில் கருத்து தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன்,

'கிழக்கு மாகாணத்தில் இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் கடந்த கூட்டத்தில் இந்த மேய்ச்சல் தரை நிலம் விவகாரம் பேசப்பட்ட போது அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட மாவட்ட இராணுவ அதிகாரி மாடுகளை கொண்டு செல்பவர்களின் பெயர் விபரங்களை தந்தால் அதற்கான அனுமதியை வழங்குவோம் என்றார்.

அந்த அடிப்படையில் அவர்களின் பெயர் விபரங்கள் வழங்கப்பட்டன. அதன் பின்பு பண்ணையாளர்கள் தமது மாடுகளை மேய்ச்சல் தரை நிலங்களுக்கு கொண்டு சென்ற போது இங்கு விவாசயம் செய்யப்படுவதாக படை அதிகாரிகள் கூறி துரத்தியுள்ளனர்.

அத்தோடு மாங்காடு மற்றும் குருக்கல் மடத்திலுள்ள ஆலயங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களை கண்டித்து கண்டன பேரணியொன்று நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கியும் இராணுவத்தினர் அதை தடுத்தனர். இவைகள் எல்லாம் இங்கு இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது என்பதை காட்டுகின்றன" என்றார்.

இதன்போது பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் குறுக்கிட்டு உங்களின் இந்த கூற்றை மறுக்கின்றேன்: இங்கு இராணுவ ஆட்சி நடைபெறவில்லை. நீங்கள் அரசியல் செய்வதற்காக இவற்றை கூறுகின்றீர்கள். உங்கள் கூற்றை ஏற்றுக் கொள்ளமுடியாது என்றார்.

அத்துடன் இங்கு மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் என சிவில் நிர்வாக ஆட்சியே நடைபெறுகின்றது. இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது என்ற கூற்றை முற்றாக நான் மறுக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன் ஆகியோருக்கு இடையில் பலத்த வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


பழவகைகளும் மரக்கறி வகைகளும்

கொள்வனவு

மாம்பழம், வாழைப்பழம்,
வத்தகைப் பழம், விளாம்பழம்

சகல விதமான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகள் கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பதனிடும் நிறுவனம் ஒன்றிற்கு தேவைப்படுகின்றன. விவசாய அமைப்புகள் மற்றும் விவசாயிகளிற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளன.

தொடர்புகளிற்கு :
பிரதேச முகவர்களை நாடவும்

யாழ்ப்பாணம் : 077 8576896
கிளிநொச்சி / முல்லைத்தீவு : 077 8277692
மன்னார்/ வவுனியா : 0778720324

(4394)



வேலை வாய்ப்பு

உங்கள் கனவு கப்பல், விமான நிலையத்தில் வேலை செய்வதாய் இருந்தால் இன்றே அழையுங்கள். கப்பல் புனர்நிர்மாணத் துறையின் வெல்டர், சாதாரண ஊழியர்கள், தச்சு மற்றும் விமான நிலையத்தில் (தனியார்) காகோ, கேட்டர்ஸ், கிளினிங், பிரிவு வெற்றிடம், 18 - 50 வயதினருக்கு சம்பளம் 18,000/-, 25,000/- 45,000/- உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் (நண்பர்கள் + குழுக்களாக இணையலாம்) **தொடர்பு: 0775561883**

(C-5348)





கொழும்பு - 10 அரச தொடர்மாடி இல. B/37/2/4 இல் வசிக்கும் **ராஜ்ரூபன் துர்காஜினி** தம்பதியரின் செல்வப் புதல்வி **ஹாஷியா** தனது முதலாவது பிறந்த தினத்தை 05.11.2013 இல் **'சந்திரவாசா'** டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகத்தில் உள்ள இல்லத்தில் 4 pm - 7.30 pm வரை வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா (Banker), அம்மப்பா மற்றும் உற்றார், உறவினர் எல்லோரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள். இவ் விழாவில் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

B/37/2/4 NHS Flats, Colombo - 10 **குடும்பத்தினர்**


கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: பூரம்1
கி.பா : 32 செவ்:1இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / ஸ்ரோர் கீப்பர்
தொ.இ: B/2427

பிறப்பு: 1986 இந்து (V)
நட்சத்திரம்: பரணி 1
கி.பா : 52.75
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L / சாரதி, கடை
தொ.இ: B/2428

பிறப்பு: 1972 இந்து (V)
நட்சத்திரம்: ரோகிணி1 செவ்: 12இல
கி.பா : 19.5
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: G.C.E A/L, Dip in ComputingProduction Manager (UK)
தொ.இ: B/2429

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: சித்திரை 3 செவ் 1இல
கி.பா : 68
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Civil Engineering, MBA (London) / Engineer (UK) - (Student Visa)
தொ.இ: B/2433

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1980 இந்து (V)
நடசத்திரம்:மகம்3 செவ்: 1இல்
கி.பா : 22.75
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L / நூலநிலையம்
தொ.இ: G/2485

பிறப்பு: 1989 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா : 13
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L / மொழிபெயர்ப்பாளர்(பெண் கணவரை இழந்துள்ளார்)
தொ.இ: G/2488

பிறப்பு: 1973 இந்து (V)
நட்சத்திரம்: கேட்டை 1 செவ்: 4ல்
கி.பா : 11.25
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L / NGO
தொ.இ: G/2489

பிறப்பு: 1989 இந்து (KO)
நட்சத்திரம்: சுவாதி 1 சூரி, செவ் 11இல
கி.பா : 32
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, CBF, DBF / அரச வங்கி
தொ.இ: G/2495

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# 1000 ரூபா கொடுப்பனவுக்கு புதியவர்களை இணைத்தல்

(யாழ்ப்பாணம்)


சமூக சேவைகள் நலத்துறை அமைச்சினால் யாழில் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களுக்கான 1000 ரூபா கொடுப்பனவுக்கு புதியவர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம், சமுர்த்தி நிவாரணம் உள்ளிட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இத்திட்டத்தில் 70 வயது பூர்த்தியடைந்த வயோதிபர்கள் இணைத்துக் கொள்ளப்படாத நிலைமை காணப்பட்டது.

சமூக சேவைகள் திணைக்களத்தினால் தற்போது புதிய திட்டத்தின் கீழ் இவ்வாண்டு யூன் மாதத்துடன் 70 வயது பூர்த்தியடைந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட அனைவரையும் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி கொடுப்பனவுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட கிராம அலுவலர்கள் மூலம் தகுதியானவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-6)




# இந்திய இழுவை படகுகளின் அத்துமீறல் குறித்து அரச அதிபரிடம் கேட்டார் டெலி

(யாழ்ப்பாணம்)

**இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல் குறித்து இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிட் டெலி யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டார்.**

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் முதற் தடவையாக வருகை தந்த இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் காலை 10 மணியளவில் யாழ். அரச அதிபரை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போது யாழ்.மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்ந்ததுடன் நிரப்பப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளனர்.

அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அரச அதிபர் பதிலளிக்கையில், அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத் திட்டங்கள் நகர்ப்புறங்களை அண்டியே மேற்கொள்ளப்படுகின்றதுடன் கிராமப் புறங்களை மையமாக வைத்து மேற் கொள்வதற்கு அக்கறை செலுத்துவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த வகையில், யாழ்.மாவட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் கிராமப் புறமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களாக அமைய வேண்டும் என தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த ஐரோப்பிய தூதுவர் டேவிட் டெலி, எதிர்கால வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான சூழ்நிலைகளை ஆராய்வதற்காக தாம் வருகை தந்துள்ளதாகவும் இவ்வாறான வேலைத்திட்டங்களை ஆராய்ந்த பின்னர், அவ்வேலைத் திட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இச் சந்திப்புக்கு பின்னர், யாழ். மாவட்ட செயலகத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ள யாழ். சின்னத்தை பார்வையிட்டதுடன் வட மாகாண வரைபடத்தையும் பார்வையிட்டார்.

இதன்போது இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல் தொடர்பிலும் அரச அதிபரிடம் கேட்டு அறிந்து கொண்டார். (அ-6)

# பாராட்டு விழாவும் மலர் வெளியீடும்

அல்வாயூர் கவிஞர் நாடக மன்றம் நடத்தும் கலாபூஷணம் மா.அனந்தராசனுக்கான பாராட்டு விழாவும், அனந்தம் சிறப்புமலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/தேவரையாளி இந்துக் கல்லூரி யின் க.மு.சின்னத்தம்பி அரங்கில் ஓய்வுநிலை அதிபர் செ.சதானந்தன் தலைமையில் நடை பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வுக்கான ஆசியுரையை சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்த ராஜக் குருக்கள் வழங்க வரவேற்புரையை க.வரதவேல் வழங்கவுள்ளார்.

அனந்தம் சிறப்புமலர் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரையை ஆசிரியர் வேல் நந்தன் வழங்க நயப்புரையை ஆசிரியர் பரா.ரதீஸ், ஓய்வுநிலை ஆசிரியர் ஆ.கந்தையா ஆகியோர் வழங்கவுள்ளனர். நூலின் முதற் பிரதியை ஓய்வுநிலை ஆசிரியர் க.கந்தசாமி பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ-5)




# கடலில் கப்பல் செல்வது போல் வீதியில் வாகனம் செல்கின்றது

## பொலிஸ் அதிகாரி விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வீதிகளில் வாகனம் செலுத்தும் இளைஞர்கள் வீதி ஒழுங்கை பின்பற்றாது கடலில் கப்பல் செலுத்துவது போல் வீதிகளில் வாகனங்களை செலுத்துவதாக காங்கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகர் சி.விஜயசிறி தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அத்தியட்சகர் மேலும் தெரிவிக்கையில்,

தென்பகுதி சாரதிகளோடு ஒப்பிடுகையில் வடபகுதி சாரதிகள் மிக மோசமாக வாகனங்களை செலுத்துகின்றனர்.

பாடசாலைகளுக்கு முன்பாகவுள்ள மஞ்சள் கோட்டு கடவைகளில் மாணவர்கள் வீதியை கடக்கும் நிலையில் கூட அவர்களைத் இடித்துத் தள்ளி விட்டு செல்கின்றனர்.

இவ்வாறானதொரு சம்பவம் அண்மையில் சுன்னாகத்திலுள்ள பாடசாலை முன்பாகவும் இடம் பெற்றுள்ளது.

சாரதிகள் பொறுப்பாக நடந்து கொள்ளாமையினால் பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. இதனை உணர்ந்து சாரதிகள் செயற்படல் வேண்டும் என்றார். (அ-4)

# நெல்லியடிநகர் பேருந்து தரிப்பிடத்தை அமைக்குக


## மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

வீதி அகலிப்பு பணிகளின் போது அகற்றப்பட்ட நெல்லியடி பேருந்து தரிப்பிடம் மீள அமைக்கப்படாமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வீதி அகலிப்பு பணிகள் பூர்த்தியடைந்து பல மாதங்களைக் கடந்து விட்ட போதிலும் வீதி அகலிப்புக்காக தரை மட்டமாக்கப்பட்டு அகற்றப்பட்ட பேருந்து தரிப்பிடம் மீள அமைக்கப்படவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பல பிரதேசங்களிலுமிருந்துவரும் பேருந்துகள் இப் பேருந்து தரிப்பிடம் ஊடாக பயணத்தை தொடரும் நிலையில் பெருமளவான பயணிகள் பயன்படுத்தும் இப் பேருந்து தரிப்பிடத்தை மீள அமைக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கும் பிரதேசமக்கள் இப்பேருந்து தரிப்பிடமின்மையால் தாம் பாரிய சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-5-10)








வேலணை மத்திய கல்லூரி பரிசளிப்பு தினவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர் கு.குலகுலராஜா, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குலகுலராஜா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண் டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2014

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2014ஆம் திகதி முதல் 31.12.2014ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | - ரூபா 500.00 |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - 04.11.2013 - 18.11.2013 மு.ப. 10.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 18.11.2013 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - 18.11.2013 பி.ப 2.30 மணிக்கு |

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.11.2013ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல்வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக் கப்படும் நேரத்தில் கேள்விக் காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதி யளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக் கலாம்.

### குறிப்பு :

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக் கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித்தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான 8 மாத காலப்பகுதிக்குள் 2014 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.
2. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு)நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம், மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
3. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00ம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.
4. சபையின் கடைகளில் இறைச்சி / கருவாடு / கோழி ஆகிய பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.
5. சுப்பிரமணியம் பூங்கா சிற்றுண்டிச்சாலை, யாழ் கச்சேரியடி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை என்பனவற்றை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.
   1) சிற்றுண்டிச்சாலை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00மணிவரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
   2) சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.
   3) மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூ.15000.00 ஐயும் உடன் செலுத்துதல் வேண்டும்.
6. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% VAT, 2%NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
7. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ் மாநகர சபைக்கே உரியது.
9. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட வராக இருத்தல் கூடாது.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*30.10.2013*

*திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா*
*மாநகர முதல்வர், மாநகரசபை.*
*யாழ்ப்பாணம்.*

(சி-5346)

## இறைச்சிக்கடை குத்தகை - 2014

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 125,000.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 54,500.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 112,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 218,500.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 70,000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 70,000.00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 330,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 78,000.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 105,500.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 105,500.00 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 143,000.00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 548,000.00 |
| 13 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 543,500.00 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 105,000.00 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 295,000.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 451,000.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 93,500.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 93,500.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 200,000.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 93,500.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 93,500.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 93,500.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 93,500.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 93,500.00 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 200,000.00 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 66,500.00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 13,500.00 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 266,500.00 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 30,240.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 477,000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 522,000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 383,000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 379,000.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 472,500.00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 379,000.00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 302,500.00 |
| 37 | முஸ்லீம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 110,000.00 |

## பொதுச் சந்தை குத்தகை - 2014

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,652,500.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,298,000.00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1,400,000.00 |
| 4 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 1,263,000.00 |
| 5 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 577,500.00 |
| 6 | அரியாலை மீன்சந்தை | 1,000.00 | 58,000.00 |
| 7 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 165,500.00 |
| 8 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 69,500.00 |
| 9 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 86,000.00 |
| 10 | பஸ்நிலைய கடைகளுக்கு கிழக்கு பக்கமாகவுள்ள து.வி.வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 250,000.00 |
| 11 | புங்கன் குளம் சந்தை | 2,000.00 | 9,000.00 |
| 12 | யாழ் கச்சேரி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 60,000.00 |

மேலதிக விபரங்களை மாநகரசபையின் நானாவிதஇறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (0718628576)

# கட்டுநாயக்க அதிவேக பாதையில் தினமும் 14 ஆயிரம் வாகனங்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்க அதிவேக பாதையினூடாக தினசரி 14 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் வீதியில் பயணிப்பதாகவும், 40இலட்சம் ரூபா வருமானம் ஈட்டப்படுவதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை நெடுங்சாலைகள் கட்டுப்பாடு மற்றும் நிர்வகிப்பு பிரிவு மேலதிக பணிப்பாளர் கஹடபிடிய கூறினார்.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக பாதை அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது.

முதல் 13 மணித்தியாலங்களில் 11 ஆயிரம் வாகனங்கள் இவ் வீதியைப் பயன்படுத்தியதில் 30 இலட்சம் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது.

அடுத்த 24 மணி நேரத்தில் வாகன போக்குவரத்து மூலம் 42 இலட்சமும் மூன்றாவது நாளில் 40இலட்சமும் வருமானம் பெறப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, சுமாராக நாளாந்தம் 40 இலட்சம் ரூபா வரை வருமானம் ஈட்டப்படுவதாக கூறிய அவர், தூர இடங்களுக்குச் செல்லும் வாகனங்களும் இப் பாதையைப் பயன்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# வைத்தியசாலைகளுக்கு கட்டில்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளை போக்குவதற்காக ஜனாதிபதியின் பாரியாரான முதற்பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷ கால்டன் சுவ உதான என்ற பெயரில் வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்தி வருகின்றார்.

இத்திட்டத்தின் கீழ் சத்திர சிகிச்சைக்குத் தேவையான கட்டில்கள் தேவையாகவிருந்த வைத்திய சாலைகளுக்கு அதி நவீன வசதிகள் கொண்ட 50 கட்டில்கள் முதற்பெண்மணியினால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முதற்பெண்மணியின் வேண்டுகோளின் பேரில் சுவிட்சர்லாந்து நிறுவனம் ஒன்றினால் சுமார் 66 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த அதி நவீன சத்திர சிகிச்சை கட்டில்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பணிப்பெண்ணுக்கு விமானத்தில் பிறந்தது குழந்தை

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப் பெண் ஒருவர் பறக்கும் விமானத்தில் குழந்தை பிரசவித்துள்ளார்.

டுபாயிலிருந்து கட்டுநாயக்க நோக்கிப் பயணித்த எயார் அரேபியா விமானத்தில் பயணம் செய்த இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் ஒருவரே இவ்வாறு குழந்தை பிரசவித்துள்ளார்.

விமானம் புறப்பட்டு இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் குறித்த கர்ப்பிணிப் பெண் பிரசவ வேதனையால் அவதியுற்றுள்ளார்.

இதனால் அருகாமையில் இருக்கும் விமான நிலைய மொன்றில் விமானத்தை தரையிறக்கி, அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

எனினும் விமானம் தரையிறக்கப்படுவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாகவே குறித்த பெண் குழந்தையை விமானத்திலேயே பிரசவித்துள்ளார்.

விமானப் பணியாளர்களும், சக பயணிகளும் குழந்தையை அவர் பிரசவிப்பதற்கு உதவிகளை வழங்கியுள்ளனர்.

விமானத்தை தரையிறக்கி தாயையும், சேயையும் ஓமான் வைத்தியசாலையில் அனுமதித்த விமானப் பணியாளர்கள் மீண்டும் இலங்கை நோக்கிய பயணத்தைத் தொடர்வதற்கு உதவி செய்துள்ளனர். (அ-2)

# இலங்கை மீனவர்கள் 24 பேருக்கு 15 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(சென்னை)

இந்திய கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 24 பேரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இராமநாதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் கன்னியாகுமரியிலிருந்து சுமார் 60 கடல் மைல் தொலைவில் நான்கு படகுகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போதே அண்மையில் இந்த மீனவர்கள் இந்திய கரையோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டி மற்றும் சிலாபத்தில் இருந்து கடலுக்குச் சென்றவர்கள் என த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை மீனவர்கள் 24 பேரையும் தூத்துக்குடி தரவைக்குளம் பொலிஸார், இராமநாதபுரம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தியிருந்தனர்.

எவ்வாறாயினும் கடும் காற்றினால் தாம் வழிதவறி இந்திய கடற்பரப்பிற்குள் பிரவேசித்ததாக இலங்கை மீனவர்கள் நீதிமன்றத்தில் தெரிவித்ததாகவும் த ஹிந்து பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் முதன்மை குற்றவியல் நீதிபதியின் உத்தரவிற்கு அமைய இலங்கை மீனவர்கள் புழல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## கொரிய மொழி பரீட்சையில் 2,526 பேர் சித்தியடைந்தனர்

கொரிய மொழித்தேர்ச்சிப் பரீட்சைக்கு இம்முறை தோற்றியிருந்தவர்களில் 2 ஆயிரத்து 526 பேர் சித்தியடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் நிர்மாணத்துறை தொழில்களுக்காக அதிக எண்ணிக்கையானோர் தெரிவாகியுள்ளதாக பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொது முகாமையாளருமான மங்கல ரந்தெனிய குறிப்பிட்டார்.

இந் நிலைமையின் கீழ் கொரியாவில் தொழில் வாய்ப்பை பெற்றுத்தருவதாகக் கூறி, சிலரால் முன்னெடுக்கப்படும் மோசடிகளில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கேட்டுக் கொண்டுள்ளது.

கொழும்பில் 6 பரீட்சை நிலையங்களில் கடந்த மாதம் 19,20 ஆம் திகதிகளில் கொரிய மொழி தேர்ச்சிப் பரீட்சை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


## பொது மக்களுக்கான அறிவித்தல்

### பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(15.10.2013 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
17. நெசனல் டிவலொப்மண்ட் பாங்க் பிஎல்சி
18. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ராண்டட் சார்ட்டட் பாங்க்
24. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மண்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மண்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14 கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
33. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

*இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

➤ மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

➤ மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477120, 2477129, 2398539 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

(சி-5353)

# மடு வலய கிராமமக்களின் சகல தேவைகளும் பூர்த்தியாக்கப்படும்

## வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் உறுதியளிப்பு

(மன்னார்)

**மன்னார் மடுவலய கிராம மக்களுக்கு அனைத்து தேவைகளையும் பெற்றுத் தருவதாக வடமாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக, வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் உறுதியளித்துள்ளார்.**

இரணை இலுப்பைக்குளம் கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் இணைந்து ஒழுங்கு செய்த கௌரவிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை குறித்த கிராமத்தின் அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போதே அமைச்சர் மேற் கண்டவாறு உறுதியளித்திருந்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சிவன் கோவிலில் மர நடுகையும் தொடர்ந்து இரணை இலுப்பைக் குளம் ஸ்ரீபத்ரகாளி அம்மன் கோவிலில் விசேட பூஜையும் இடம்பெற்றது.

தொடர்ந்து இரணை இலுப்பைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள அதிபருடன் பாடசாலையின் குறை நிறைகள் பற்றி அமைச்சர் கலந்துரையாடினார்.

அதன் நிறைவில் கிராம அபிவிருத்தி மண்டபத்தில் அந்த கிராம மக்களை சந்தித்து உரையாற்றினார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், இங்கு வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையின் பின்னணியில் தான் கிராமத்தின் அபிவிருத்தி தங்கியுள்ளது.

இனி வரும் காலங்களில் நாம் அனைவரும் தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரு கருத்திலேயே ஒன்றிணைய வேண்டும்.

அப்படியாக இருந்தால்தான் மட்டுமே அமைச்சின் கீழ் பாகுபாடின்றி மக்களுக்கு என்னால் சேவையாற்ற முடியும். மதங்கள் ஒருபோதும் தீமைகளை மக்களுக்கு போதிப்பதில்லை. எனவே மதங்களினூடாக மக்களை நல்வழிப்படுத்த முடியும்.

எனது பணிகள் இலகுவான முறையில் மக்களை சென்றடைய நான் ஒரு திட்டத்தை வகுத்து ள்ளேன்.



அதற்கமைவாக ஒரு விசேட குழுவை நியமித்து கிராமங்களுக்கான தேவை மதிப்பீடு (Needs Assessment) ஒன்றைச் செய்து ஒவ்வொரு கிராமத்திலும் நான்கு நபர்களைக் கொண்ட செயற்பாட்டு குழு (Action Team) ஒன்றை உருவாக்கி இவர்களுக்கூடாக ஒவ்வொரு கிராம மட்ட பிரச்சினைகளையும் நான் அறிந்து எனது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கவுள்ளேன்.

கல்வி என்பது மிகவும் அவசியமான விடயம் என்பதை ஒவ்வொரு மாணவனும் பெற்றோர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். வறுமையைக் காரணம் காட்டி எவரும் கல்வியை இழக்கக்கூடாது இந்தக்கிராமத்தின் பாடசாலையைத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி வட மாகாண கல்வி அமைச்சருடனும் பேசுவேன். வைத்தியர் இல்லாத குறையை சுகாதார அமைச்சருடன் கலந்து பேசி அக்குறைகளை நிறைவு செய்வேன்.

தொடர்ந்து அங்குள்ள இந்துக்கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் பள்ளி வாசல்களுக்கு விஜயம் செய்து அனைத்து மதத்தலங்களையும் புனரமைப்பதற்கான ஒழுங்குகளை விரைவில் செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

அயல் கிராமங்களான பூசாரியார் குளம், மண்கிண்டி, விளாத்திகுளம், பரிசங்குளம், அலைகல் போட்டகுளம், சின்னவலையன் கட்டு, காக்கையன் குளம், கல்மடு, மதீனா நகர், முள்ளிக்குளம் ஆகிய இடங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். (ம-4)

# பலகாலமாக உடைந்து காணப்படும் தபால் பெட்டி



(குருமன்காடு)

வவுனியா உள்வட்ட,வெளிவட்ட வீதியில் காணப்படுகின்ற தபால்பெட்டி பல காலமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, வவுனியா உள்வட்ட,வெளிவட்ட வீதியில் அமைந்துள்ள தபால்பெட்டி பல காலமாக சேதமடைந்து மக்களுடைய பாவனைக்கு ஏற்புடையதற்ற நிலையில் காணப்படுவதால் அப்பிரதேச மக்கள் கடிதங்களை அனுப்புவதற்கு பிரதான தபாலகத்திற்கே செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இது பற்றி பல தடவை தபால் அதிகாரிகளுக்கு அறிவித்த போதிலும் இதுவரையில் எதுவித நடவடிக்கைகளும் இதுவிடயத்தில் எடுக்கப்படவில்லை.

சேதமடைந்துள்ள தபால் பெட்டிக்கு அருகல் இரு வங்கிகள் உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். (ம-250)

# கமக்கார அமைப்புக்கள் நன்முறையில் இயங்குவதில்லை

## விவசாயிகள் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் பெரும்பாலான கமக்கார அமைப்புக்கள் நல்ல முறையில் இயங்குவதில்லை எனவும் இவற்றுக்கான புதிய நிர்வாக தெரிவுகளைத் தெரிய வேண்டுமென பலமுறை முறையிட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக கமநல சேவை நிலையங்களுக்கு பொறுப்பாகவுள்ள உயர் அதிகாரியிடம் முறையிடப்பட்ட பொழுது கமநல சேவை நிலையங்களுக்கு பொறுப்பாகவுள்ள அதிகாரிகளே இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென தெரிவித்தார்.

இதனால் உரிய ஒழுங்குகள் எப்பகுதியினராலும் மேற்கொள்ளப்படாது இழுத்தடிக்கப் படுகின்றது.

குறிப்பாக சில கமக்கார அமைப்புக்களில் கணக்கு வழக்குகள் சரியாகப் பேணப்படுவதில்லை எனவும் விவசாயிகளுக்கு இக்கணக்குகள் தொடர்பாக தெரியப்படுத்தப்படுவதில்லை எனவும் தெரியவருகிறது.

அத்துடன் சில கமக்கார அமைப்புக்கள் உரமானியம் வழங்குவதற்கு உரிய இலவச படிவங்களை, பணத்தை பெற்றே வழங்குகின்றனர்.

அடிப்படை உரமாக பாவிக்க வேண்டிய நிலப்பசளை இதுவரை விவசாயிகளுக்கு கிடைக்காத நிலையும் உள்ளது.

இத்தகைய நிலைமைகள் தொடர்ச்சியாக இடம் பெறுவதால் விவசாயத்தையே ஜீவனோபாயமாக நம்பியிருக்கும் விவசாயிகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

தற்போதுள்ள வடமாகாண விவசாய அமைச்சு இது விடயத்தைக் கவனத்தில் எடுத்து விவசாயிகளுக்கு நன்மை கிடைக்க் ஆவண செய்யுமா? என விவசாயிகள் எதிர்பார்க்கின்றார்கள். (ம-254)









முல்லைத்தீவிலிருந்து பரந்தன் செல்லும் பாதையில், வட்டுவாகலை முள்ளிவாய்க்காலுடன் இணைக்கின்ற மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ள வட்டுவாகல் பாலத்தை வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பிரதேச மக்களுடன் நேரில் சென்று பார்வையிட்டதை படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)




# கழுதை ஜோசியம்



ஒரு ஊரில், ஒரு ஜோதிடர் இருந்தார். அவர் முகூர்த்தம் வைப்பதிலும், ஜாதகம் கணிப்பதிலும் நிபுணரென்ற பெயரைப் பெற்றுவிட்டார்.

இதை அறிந்து அந்நாட்டின் தலைநகரிலுள்ள சில உயர் அதிகாரிகள் அவரை வரவழைத்துக் கொண்டார்கள். நாளாவட்டத்தில் அவரது திறமையைக் கண்டு அரசனும் மகிழ்ந்து அவரைத் தனது ஆஸ்தான ஜோதிடராக அமர்த்திக் கொண்டான்.


அந்த ஜோதிடருக்குப் பணம் நிறையக் கிடைக்கலாயிற்று.

அவர் தனக்கு கிடைத்த பணத்தைக் கொண்டு தனது ஊரில் ஏராளமான நிலத்தை வாங்கிப்போட்டார். சொந்த விவசாயம் நடத்திப் பயிர் செய்து அதன் மூலமும் நிறையப்பணம் பெறலானார். அவர் அடிக்கடி தனது நிலபுலன்களைக் கவனிக்கக் கிராமத்திற்குச் செல்வது வழக்கம்.

ஒருதடவை அவர் தனது கிராமத்திற்குச் சென்றபோது, ஒருநாள் மாலை ஆற்றங்கரைப் பக்கம் உலாவிக் கொண்டிருந்தார். அவரது நிலங்களில் பயிர் அறுவடையாகித் தானியம் போர் போராகக் குவிந்து கிடந்தது.

அப்போது அவ்வழியாக ஒரு வண்ணான் தன் கழுதை மீது துணி மூட்டைகளைப் போட்டுக்கொண்டு வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் சட்டெனத் தன் கழுதையை நிறுத்தி ஜோதிடரைப் பார்த்து "ஐயா! உங்கள் தானியத்தை எல்லாம் பத்திரமாக வைக்கவில்லையா? இன்னும் இரண்டு நாளிகையிலே பெரிய புயல் அடிக்கப்போகிறதே" என்று கேட்டான்.

"புயலா? இப்போது எங்கே? ஆகாயத்தில் ஒரு மேகம்கூட இல்லை. எங்கேயிருந்து புயல் அடிக்கப்போகிறது! மகாஜோசியம் சொல்ல



ஆரம்பித்துவிட்டாயே, என்னிடமே! இனிமேல் அந்த மாதிரி பெரியவர்கள் முன்னால் துடுக்குத் தனமாக ஏதாவது உளறிக்கொட்டாதே. எனக்குத் தெரியாத ஜோசியமா உனக்குத் தெரியும்?" என்று கோபித்துக் கொண்டார் அந்த ஜோதிடர்.

அதற்கு வண்ணான் "என்னமோ நல்லதைச் சொன்னால் இந்தக் காலத்தில் கெட்டபெயர் தான். சரி, நான் போய் வருகிறேன்' என்று கூறி விட்டு அங்கிருந்து கிளம்பினான். அவன் போன சற்று நேரத்திற்கு பிறகு, கீழ்வானத்தில் சிறு மேகம் தென்பட்டது.



சற்றுநேரத்தில் அது கறுத்துப் பருத்து யானை உருவத்தை அடைந்தது. அது முன்னே வர, அதன் பின்னால் அடர்ந்த மேகங்கள் அதி வேகமாக வந்து ஆகாயத்தில் பரவி சூழ்நிலையை ஒரே இருட்டாக்கிவிட்டது.

ஜோசியர் பதைபதைத்தார். அந்த வண்ணான் கூறியது பலித்துவிடும் போலிருக்கிறதே என்று அவர் நினைத்துத்தமக்கு அவமானம் நேர்ந்து விடுமோ என்று பயந்து கொண்டிருந்தார். அவர் என்ன செய்வதென யோசிப்பதற் குள்ளே சூறாவளிக் காற்று வீசியது. மழையும் பொழிந்து, எங்கும் ஒரேசேதம், நஷ்டம், நாசம், ஒரேவெள்ளக் காடாகிவிட்டது அந்தப் பிரதேசம். ஜோதிடரின் சப்த நாடியும் அடங்கி விட்டது.

அப்போது அவர் "ஆமாம்," அந்த வண் ணானுக்கு எப்படிப் புயல் வருமென்று முன்கூட்டியே தெரிந்தது என ஆச்சரியப் பட்டு அவனது வீட்டைத் தேடிக்கொண்டு கிளம்பினார்.

தன்னுடைய வீட்டுக்கு ஜோதிடர் வருவதைக்கண்ட வண்ணான், "வாங்க ஐயா, வாங்க! வாங்க! துணிமணி வெளுக்க வேண்டுமானால் ஒரு வார்த்தை யாரிடாவது சொல்லி அனுப்பி இருந்தால் , நான் உங்கள் வீட்டுக்கு வந்திருப்பேனே!" என்று அவரை வரவேற்றான். அதற்கு "அவர் துணி வெளுக்க நான் வரவில்லை. வாஸ்தவமாக நீ சொன்னபடிப் புயலும், மழையும் வந்ததே! உனக்கு ஜோசியம் தெரியுமா?" என்றார்.

அதற்கு அவன் "ஜோசியமாவது, மண்ணாவது! இந்த சமாசாரத்தை எனக்கு கூறியது என் கழுதையே. இன்னும் சற்று நேரத்தில் மழை பெய்யப் போகிறதென்றால், அதன் உடலின் உரோமங்கள் குத்திட்டு ஆணிபோல் விறைப்பாக இருக்கும்.

உடனே, அது தன் காதை நிமிர்த்தி ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு பலமாகக்கத்தும். பின்னர், தன் வாலை மடக்கி, நீட்டி சேஷ்டை செய்யும். இப்படிதான் மழைபெய்யப்போகிறது என்பதை தெரிவிக்கும்.

இதுபோல மற்ற சில சம்பவங்களை அறிவிக்க, வேறு சில சேஷ்டைகளையும் செய்யும்" என்றான்.

ஜோசியர் வாயடைத்து நின்றார். வண்ணானின் நுண்ணிய அறிவைக் கண்டு அவருக்கு வியப்பாக இருந்தது.

அதே சமயம் கழுதை ஜோசியமே அலாதியாக இருக்கிறதே என்று மூக்கின்மேல் விரலை வைத்து தலை குனிந்து கொண்டே சென்றார்.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2013
03

- 644- இரண்டாவது முஸ்லிம் கலீபா உமறு இப்னு அல்-கத்தாப் மதினாவில் பாரசீக அடிமையினால் கொல்லப்பட்டார்.
- 1493-கரிபியன் கடலில் டொமினிக்காத் தீவை முதன்முதலில் கொலம்பஸ் கண்டார்.
- 1655-பிரான்சும் லண்டனும் இராணுவப் பொருளாதார ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- 1793-பிரான்சின் நாடகாசிரியரும் செய்தியாளரும் பெண்ணியவாதியுமான ஒலிம்பியா டி கூஸ் தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனைக் குள்ளாக்கப்பட்டார்.
- 1812- நெப்போலியனின் இராணுவத்தினர் வியாஸ்மா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்றனர்.
- 1838-பாம்பே டைம்ஸ் முதன் முதலில் வெளியிடப்பட்டது. இது பின்னர் 1861 இல் டைம்ஸ் ஒவ் இந்தியா எனப் பெயரிடப்பட்டது.
- 1903-ஐக்கிய அமெரிக்காவின் தூண்டுதலை அடுத்து பனாமா கொலம்பியாவிடம் இருந்து தனது விடுதலையை அறிவித்தது.
- 1905-ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க உத்தரவிட்டான்.
- 1913-ஐக்கிய அமெரிக்கர் வருமான வரியை அறிமுகப்படுத்தியது.
- 1918-போலந்து ரஷ்யாவிடம் இருந்து விடுதலை அறிவித்தது.
- 1943-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் வில்ஹெம்ஷாஃபென் துறைமுகத்தை அமெரிக்காவின் சுமார் 500 போர் விமானங்கள் தாக்கி அழித்தன.
- 1957- உலகில் முதன் முதலில் மிருகம் ஒன்றை (லைக்கா என்னும் நாயை) சோவியத் ஒன்றியம் ஸ்புட்னிக் 2 விண்கப்பலில் விண்வெளிக்கு அனுப்பியது.
- 1963-ஜெய்ப்பூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் மாநாட்டில் காமராசர் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1964-வாஷிங்டன் டீசி மக்கள் முதன் முறையாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டார்கள்.
- 1970-சல்வடோர் அலெண்டே சிலியின் ஜனாதிபதியானார்.
- 1973-நாசா மரைனர் 10 என்ற விண்கப்பலை புதன் நோக்கி அனுப்பியது. 1974, மார்ச் 29 இல் அக்கோளை அடைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1978-டொமினிக்கா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1979- கம்யூனிச பாட்டாளிகள் கட்சியில் 5 உறுப்பினர்கள் வெள்ளையின மேலாதிக்கவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
- 1986-மைக்குரோனீசியா கூட்டு நாடுகள் ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து விடுதலை பெற்றது.

**பிறப்புக்கள்**

- 1618-ஔரங்கசீப், இந்தியாவின் மொகலாய சக்கரவர்த்தி (இ.1707)
- 1795-ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1849)
- 1911-ஏ.கே.செட்டியார், தமிழில் பயண இலக்கியத்தின் முன்னோடி (இ.1983)
- 1933-அமர்த்தியா சென், இந்தியப் பொருளாதார நிபுணர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1932-அன்னை பூபதி, மட்டக்களப்பில் இந்திய அமைதிப்படைக்குஎதிராகசாகும்வரைஉண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தவர் (இ.1988)

**இறப்புக்கள்**

- 2006-ஈ.வி.சரோஜா, தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1935)

# உன் வாழ்க்கை உன் கையில்




ஆன்மீகம் 26

இந்த வாக்கியத்தைக் கேட்ட மாத்திரத்தில் உங்களில் பலர் வணிக நிர்வாகத்தையும் தொழில் நிர்வாகத்தையுமே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அடிப்படையில் வாழ்க்கையே நிர்வாகம்தான். உள்நிலையிலோ, புறநிலையிலோ நன்றாக வாழ வேண்டும் என்று எண்ணினால் அது உங்களை நீங்களே எப்படி நிர்வகிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமையும்.

உங்கள் உடல், மனம், உணர்வுகள், சூழ்நிலைகள், சமூகம், தேசம், உலகம், வாழக்கையின் தரம் என எல்லாமே நீங்கள் உங்களை எவ்வளவு திறம்பட நிர்வகிக்கிறீர்களோ என்பதைப் பொறுத்தே உள்ளது. துரதிர்ஷ்டவசமாக இன்றைய உலகில் அனைத்துமே பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்டுதான் இயங்குகிறது. வாழ்வின் மற்றைய அம்சங்கள் பின்னே தள்ளப்பட்டு இருக்கின்றன. பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கும் போது மகிழ்ச்சி பல வழிகளில் தொலைந்துவிடக்கூடும்.

வாழ்வில் தோல்வி அடைந்தவர்கள் தோல்வியின் பாதிப்பை அடைந்திருக்கிறார்கள். வெற்றி பெற்றவர்களும் பாதிப்பை அடைகிறார்கள். தோல்வியின் பாதிப்பை அனுபவிப்பது புரிந்துகொள்ளக் கூடியது. ஏனென்றால், தோல்வி எளிதில் வரும். ஆனால், வெற்றி பெற்றவர்களும் பாதிக்கப்படுவது துயரம் தருகிற விடயம். ஏனெனின் வெற்றி அவ்வளவு எளிதில் வருவதில்லை. நீங்கள் வாழ்வில் எதை அடைய விரும்பினீர்களோ, அந்த வெற்றியை அடைந்த பின்னர் அதனால் பாதிப்பிற்கு ஆளாகிறீர்களென்றால் அதுதான் வாழ்வின் உண்மையான துயரம்.

இன்று உலகில் பெரும்பாலானோர் தங்கள் வெற்றிகளால், பாதிப்பிற்குத்தான் ஆளாகி இருக்கிறார்கள். ஐந்து வயது குழந்தையாக இருந்தபோது மனிதர்களுக்கு இருந்த மகிழ்ச்சி, வயது கூடக்கூட குறைந்துகொண்டே வருகிறது. காலப் போக்கில், மகிழ்ச்சியாய் இருக்கிற நேரம் மிகவும் குறைவாக இருக்கிறது. நீங்கள் எதைச் செய்தாலும் அது மகிழ்ச்சியைக் கொண்டு வரும் என்று நம்பிச் செய்கிறீர்கள். ஆனால், அவை மகிழ்ச்சியைக் கொண்டு வருவதில்லை.



அப்பாடியானால் உங்களை நீங்கள் நிர்வகிக்கிற முறை சரியில்லை என்றுதான் பொருள். நீங்கள் பெறுகிற கல்வி, செய்கிற வேலை, உருவாக்குகிற குடும்பம், தேடுகிற இலட்சியம் இவை எல்லாமே மகிழ்ச்சிக்காகத்தான்.

இத்தனைக்கும் பிறகு மகிழ்ச்சி குறைகிறதென்றால் உங்களை நீங்களே மோசமாக நிர்வகிக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்.

இன்று எங்கே போனாலும் மன அழுத்தத்தை நிர்வகித்தல் குறித்து எல்லோரும் பேசுகிறார்கள்.

தொழி லையும், குடும்பத்தையும், சொத்தையும் நிர்வகிக்கலாம். ஆனால், மன அழுத்தத்தை ஏன் நிர்வகிக்க வேண்டும் என்று யோசித்தால் வாழ்வதற்கு வேறு வழியே இல்லை என்று மக்கள் நினைத்துவிட்டார்கள் என்று பிறகுதான் தெரிகிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்



# தஞ்சைத் தரணியில்- ஈழத் தமிழர் படுகொலை அழியாத சாட்சியமாக

## வைகோவின் அறிக்கை

தஞ்சையில் நடைபெறும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனைத்து தமிழர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ள வைகோ தனது அறிக்கையில்,

அகிலத்தின் நெடிய வரலாற்றில், திகைத்துத் திடுக்கிடச் செய்யும் வீர சாகசங்களையும், தியாகங்களையும் படைத்த தமிழீழ விடுதலைப்புலிகளின் மெய்சிலிர்க்க வைக்கும் போர்க்களங்களையும், மரணத்துக்கு அஞ்சாது, உயிர்களைத் தாரை வார்த்த உன்னதத்தையும் கற்கள் பேசும் சிலைகளாக அண்ணன் பழ.நெடுமாறனின் விழுமிய ஏற்பாட்டால், நம் இருதயங்களின் அழியாத காட்சிகளாகச் சித்தரிக்கும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம், நவம்பர் 8 ஆம் திகதி தஞ்சை திருநகர்-விளார் புறவழிச் சாலையில் திறக்கப்படும் நிகழ்ச்சி நடைபெறும் என்றும்,

முத்துக்குமார் திடலில், பாலச்சந்திரன் அரங்கத்தில் திறப்பு நிகழ்ச்சி அரங்கேறுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இராசராசேச்சுரம் என்னும் பெருவுடையார் கோவிலை அருண்மொழிவர்மனாம் இராசராசசோழன் கட்டியபோது அக்கோவிலில் சிலைகள், அழகிய கோபுரத்தில் பதித்த கற்கள், இவற்றில் பட்டுத் தெறித்த சிற்பிகளின் உளிகள் எழுப்பிய ஓசைகள் மீண்டும் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் ஒலித்தன என்றும் பெருமைபடக் கூறியுள்ளார்.

மேலும்,தமிழ்த் தாயின் பேருரு, சிலை வடிவில்!

ஈழத்தில் சிங்களப் பேரினவாதக் கொடியோர் தமிழர்கள் மீது நடத்திய கொடூரமான இனப்படுகொலைக் காட்சிகள் சிலை வடிவில்!

வானிலிலிருந்து கொத்துக்கொத்தாக தமிழர் மீது பாயும் குண்டுகள், உடல்கள் சிதைந்து துடித்து மடியும் தமிழர்கள்; தமிழ்ப் பெண்களின் வயிற்றை பயனைட் கத்திகள் கிழித்துக் கருவில் உருவாகிய பிஞ்சுகள் அழிக்கப்பட்ட கொடூரம் சிலைவடிவில்!

பிறந்த மண்ணை விட்டு கூட்டம், கூட்டமாக முதிர்வயதினரும், பாலகர்களும் உடன் வர, தமிழர்கள் அடைக்கல நிழல் தேடிச் செல்லும் பேரவலம் சிலை வடிவில்!

குண்டுமழை நெருப்பில் துடிதுடித்துத் தமிழர்கள் செத்திடும் துன்பம் சிலைவடிவில்!

தொப்புள்கொடி உறவுகள் இப்படி நாதியற்றுச் சாவதோ? இந்த அக்கிரமக் கொடுமைக்கு இந்திய அரசே துணை போவதோ? தாக்குதல் நிற்காதா? தமிழர்கள் சாகும் அவலம் தணியாதா? இன்னுமா உறக்கம் தாய்த்தமிழகத்தில்? மான உணர்ச்சியற்ற சதைப்பிண்டங்களா தமிழர்கள்? என்ற சவுக்கடி, தமிழர்கள் நெஞ்சில் விழட்டும்.

நெருப்பில் கருகும் என் உடலும், விடியருக்கு ஏங்கும் என் உயிரும் அந்தச் சவுக்காக மாறட்டும் என்று மரண நெருப்புக்குத் தங்கள் ஆவியைத் தந்த முத்துக்குமார் உள்ளிட்ட வீரத் தியாகிகளின் உருவங்கள் சிலை வடிவில்!

ஆம்; இந்தச் சிலைகள் பேசுகின்றன. உயிர்த்துடிப்புடன் நம்மீது கேள்விகளை வீசுகின்றன. காரணம், இந்தச் சிலைகளை வடித்த சிற்பிகளின் மனதில் மூண்ட ஆவேசத்தீ, அவர்களின் கரங்களை இயக்கியுள்ளது.

இந்த முள்ளிவாய்க்கால் முற்றம் என்பது, இப்புவி எங்கும் வாழும் மனித குலத்துக்கு, தாய்த் தமிழகத்தின் தன்மானத் தமிழர்கள் விடுத்துள்ள அறைகூவல் பிரகடனம் ஆகும். தமிழ் ஈழத் தாயகத்தில், விடுதலைப்புலிகளின் மாவீரர் துயிலகங்களை, கொடியவன் இடித்துத் தகர்த்து மண்ணோடு மண்ணாக்கிவிட்டான்.

நான் நெஞ்சால் பூஜிக்கும் தலைவர் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறை இல்லத்தை மண்மேடாக்கிவிட்டான். கிளிநொச்சியில் யுத்தகளத்தை இயக்குவதற்கு தலைவர் பிரபாகரன் அமைத்திருந்த நிலவறையை அண்மையில் குண்டு வைத்துத் தகர்த்தான்.

அந்த ஈழ மண்ணில் விடுதலைப்புலிகள் சிந்திய இரத்தத்துளிகளும், அவர்களின் எலும்புத் துகள்களும் நீக்கமறக் கலந்து இருப்பதை, சுதந்திரத் தமிழீழம் என்று அவர்கள் எழுப்பிய போர்முழக்கமும், அவர்களின் உணர்வோடு கலந்த சுவாசமும் அக்காற்று மண்டலத்திலே சுற்றிச்சுற்றிச் சுழல்கிறது.

இதோ 18 கல் தொலைவுக்கு அப்பால் அமைந்துள்ள தஞ்சைத் தரணியில் இருந்துதான் கரிகால் பெருவளத்தான் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் படையெடுத்துச்சென்று, சிங்களவர்களைச் சிறைப்பிடித்து இங்கு கொண்டு வந்து சோறு போட்டு, காவிரியின் கரைகளை உயர்த்த வேலை வாங்கினான். இராசராச சோழனும் இராசேந்திர சோழனும் படையெடுத்து புலிக்கொடியை ஆட்சிக்கொடியாக்கினர். மாமன்னன் சங்கிலி, போர்த்துக்கீசரோடு போர் தொடுத்தபோது தஞ்சை இரகுநாத நாயக்க மன்னன் வருணகுலத்தான் தலைமையில் படைகளை சங்கிலிக்குத் தோள் கொடுக்க அனுப்பினான்.

இன்று அதே தஞ்சைத் தரணியில் ஈழத் தமிழர் படுகொலையை அழியாத சாட்சியமாக உலகத்திற்குக் காட்டவும் சுதந்திரத் தமிழீழ விடியலுக்கு தாய்த் தமிழகத்து இளம் தலைமுறையினர் வஞ்சினம் பூணவும் குறிக்கோளாகக் கொண்டு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் அண்ணன் பழ.நெடுமாறன், முள்ளிவாய்க்கால் முற்றத்தை எழுப்பியுள்ளார்.

மாவீரர் மண்டபத்தில் முதல் மாவீரன் சங்கர் முதல் மாவீர மகன் பாலச்சந்திரன் வரை கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் சித்திரங்களைக் காணலாம். பலியான முதல் பெண் போராளி மாலதி முதல் அங்கயக் கண்ணி வரை, கரும்புலி மாவீரர்களை, தியாக தீபம் திலீபன் முதல் கரும்புலி மாவீரன் கேப்டன் மில்லர் வரை, பேசும் சித்திரங்களாகப் பார்க்கலாம். இந்திய அமளிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் மூளக் காரணமான, குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 பேர், சயனைட் குப்பி கடித்து உயிர் துறந்த அவலத்தை நம் போற்றுதலுக்குரிய வேலுப்பிள்ளை, பார்வதி அம்மாள் வீர மைந்தன் சார்ல்ஸ் ஆண்டனியின் வீரப்புன்னகையை ஓவியமாகப் பார்க்கலாம்.

அடுத்து, முத்தமிழ் மண்டபத்திற்குள் நுழைவோம். இங்கு, அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றிய தமிழ் அறிஞர்களின் புகைப்படங்கள், இலக்கிய வித்தகர்கள், இசைவாணர்கள், கலை உலகில் கருவூலமான வெள்ளித்திரை நட்சத்திரங்கள், இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர்க்களத்தில் அடக்குமுறைக்குப் பலியானவர்கள் தீக்குளித்து மாண்ட தியாகிகள் அனைவரது புகைப் படத்தையும் இங்கு காணலாம்.

தமிழர்கள் மட்டுமல்ல, உலகெங்கும் இருந்து இந்த நாட்டில் காலெடுத்து வைப்பவர்கள் அனைவரும் வந்து பார்க்க வேண்டிய அருங்காட்சியகம்தான் முள்ளிவாய்க்கால் முற்றம்.

முன்னர், நான் மாடக் கூடல் மதுரைக்கு அருகில் அழகர் கோவில் பக்கத்தில், குன்றக் கடவுள் முருகனுக்கு பழமுதிர்சோலை ஆலயம் எழுப்பினார் மதுரை பழனியப்பனார். அவரது அருமைந்தர் பழ.நெடுமாறன், வரலாற்றில் அழியாத முள்ளிவாய்க்கால் முற்றத்தை உருவாக்கியுள்ளார்.

நம் வாழ்வில் முள்ளிவாய்க்கால் முற்றத் திறப்பு நிகழ்வில் பங்கேற்பது தலையாய கடமை என்ற வீர உணர்வுடன் அனைவரும் தஞ்சையில் சங்கமிப்போம் என அழைத்து முடித்துள்ளார் தனது அறிக்கையை வைகோ.

# தொழிற்பயிற்சிகள் பெறுவதில் இளம் தலைமுறையினர் ஆர்வம் கொள்ளவேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்


(கிளிநொச்சி)

**எமது இளம் தலைமுறையினர் தொழிற்பயிற்சிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். தவறின் எமது பிரதேசங்களின் அபிவிருத்திக்கு வெளிநாட்டவரையே தொடர்ந்தும் வேலைக்கமர்த்த வேண்டிய நிலை உருவாகுமென பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் நடாத்தபட்டுவரும் தையல், அழகுக்கலை, நீர்க்குழாய்ப பொருத்துதல்,கணனி கற்கைநெறி, வீட்டு மின்இணைப்பு, தச்சு வேலை ஆகிய பயிற்சி நெறிகளில் தரம் 3, தரம் 4 ஆம் கட்டங்களை நிறைவு செய்த மாணவர்களுக்கான தேசிய தொழில்நுட்பத்தகைமைக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

1995 ஆம் ஆண்டில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக யுத்த பாதிப்புக்களை எதிர்கொண்ட எமது பகுதிகளிலேயே அதன் சேவை கிடைக்கப்பெறுகின்றது. யுத்தத்தின் பாதிப்புக்குட்பட்டிருந்ததன் காரணமாக இப்பகுதிகளில் வாழ்ந்த



மக்கள் பல தொழில் வாய்ப்புக்களை இழந்திருந்தனர். ஆனால் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறான வாய்ப்புக்களை அவர்கள் படிப்படியாக பெற்று வருகின்றனர்.

மேலும் மீள்குடியேற்றத்தின் பின்னரான காலப்பகுதிகளில் தொடர்ந்து வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அமைவாக வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன, மிகப் பெரிய பாலங்கள் புனரமைக்கப்பட்டன. பெருந்தொகையான கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன, ஏ-9 வீதி புனரமைப்புக்கு மட்டும் 26 ஆயிரம் மில்லியன் ரூபா வரை செலவு செய்யப்பட்டது. ஆனால் இவ் வேலைத்திட்டங்களின் போதெல்லாம் எமது மக்கள் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளது.

தொழில்நுட்பவியலாளர்களும் ஏனைய வேலையாட்களும் தென்னிலங்கை மற்றும் சீனாபோன்ற நாடுகளிலிருந்தே வரவழைக்கப்பட்டிருந்தனர். எமது மக்கள் சாதாரண கூலித தொழிலாளர்களாக மட்டுமே பணியாற்றினர்.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலையை எண்ணி நாம் மனம் வருந்துகின்றோம். எனவே எமது இளைஞர் யுவதிகள் இவ்வாறான தொழிற்பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கற்க வேண்டும். அப்போதுதான் அவர்களும் இவ்வாறான உயர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தவறின் தொடர்ந்தும் எமது பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு வெளிநாட்டவரையே வரவழைக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் எமது மக்கள் நல்ல தொழில் வாய்ப்புக்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து விடுவர்.

2010 ஆம் ஆண்டுக்குப்பின்னர் வன்னி பெருநிலப்பரப்பில் பல்வேறுபட்ட தொழிற்பயிற்சி மையங்கள் சேவைகளை ஆரம்பித்துள்ளன.

மேலும் பாரிய தொழிற்பயிற்சி மையங்களை நிறுவும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. அதற்கமைவாக கிளிநொச்சியில் வடமாகாணத்திற்கான ஜேர்மன் தொழில்நுட்ப கல்லூரியை அமைக்கும் பணி சுமார் 850 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட்டு வருகின்றது.

இது 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் திறந்துவைக்கப்படவுள்ளது என்று மேலும் கூறினார். (ம)

# கௌரவிப்பு நிகழ்வு

(கிளிநொச்சி)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் 15ஆவது நிலைக்கு உட்பட்ட மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மகரகம தேசிய இளைஞர் சேவை மன்ற நிலையத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வு தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரணையுடன் இடம்பெற்றது.

இதில் தேசிய மட்டத்தில் இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மேற்படி நிலைக்குட்பட்ட மாணவர்கள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் பரிசில்களும் பதக்கங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இம்மாணவர்களின் பெற்றோர்கள்,பாதுகாவலர்கள் பெருமளவிலானோர் பங்குபற்றியிருந்தனர்.

மாணவர் கௌரவிப்புக்குப்பின்னர் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-254)




# நஞ்சுண்டான் குள புனரமைப்பால் 1300 குடும்பங்கள் பயனடையும்

## வடமாகாணசபை உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவிப்பு

(குருமன்காடு)

முல்லைத்தீவு நஞ்சுண்டான் குளத்தை புனரமைப்பதன் மூலம் அப்பகுதியில் வாழும் 1300க்கு மேற்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியும் என வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு, றெட்பானாவுக்கு தெற்குத் திசையில் அமைந்துள்ள நஞ்சுண்டான் குளத்தை புனரமைப்பதன் மூலம் வள்ளுவர்புரம், தேராவில், மாணிக்கபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 1300 குடும்பங்கள் பயன் பெறமுடியும். இக் குளத்தை அண்டி 6000 ஏக்கர் விவசாய நிலம் தரிசாகவுள்ளது.

முன்னைய காலங்களில் விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட இந்நிலம், இக்குளம் புனரமைக்கப்படாமையால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

இப்பகுதி மக்கள் 1972 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது இங்கு குடியேறியவர்களாவர். தொடர்ச்சியான போர் நடவடிக்கைகளால் பாதிப்படைந்து தற்போது மீள் குடியேறியுள்ள நிலையில் இவர்கள் தொழில் வாய்ப்பின்றி தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு, எமது வடமாகாணசபையும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ் விடயத்தில் கவனம் செலுத்தி அப்பகுதி மக்கள் வாழ்வதற்கும் தொழில் செய்வதற்கும் வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-250-266)





மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற வடமாகாண ஆங்கில மொழித்தின போட்டியில் கவிதை நாடக போட்டியில் வடமாகாணத்தில் முதல் இடம்பெற்ற மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவர்களுடன் அவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையின் பிரதி அதிபர் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:பூந்தோட்டம் செய்தியாளர்)

# உரவிநியோகம்

(கண்டாவளை)

இவ் ஆண்டுக்கான கால போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே கமக்கார அமைப்புக்களூடாக பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கான உர விநியோகம் புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கடந்த காலங்களில் உர விநியோகம் உரிய காலப் பகுதியில் வழங்கப்படாமையால் விளைச்சல் குறைவாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-263)



## உன் நினைவு

நினைவில்தான்
உன்னுடன்
பேசமுடியவில்லை
கனவிலாவது
பேசலாமென்றால்
உன் நினைவு என்னை
தூங்க விடுவதில்லை
நீ சென்ற பிறகும்
உனக்காக ஒரு ஜீவன் ஏங்கும்
அதில் உன் கனவை மட்டுமல்ல
மனதையும் சுமக்கும்
சட்டென்று திரும்பிப்பார்
அங்கே நீயாக நீ
இருக்கமாட்டாய்
பதிலாக நான் இருப்பேன்

ஏ.சிறிமலா, துன்னாலை

## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
ஊர் பார்க்க
பார் போற்ற
வாழ வைக்க வேண்டிய
தன் தாய் தந்தையரை
சங்கடமேதுமில்லாமல்
சந்தி சிரிக்கச் செய்கிறாள்
தன் சந்ததி தவறுமெனும்
சிந்தனை தவறியவன்

மாவை. நா.கஜேந்திரன்

## விழிப்புணர்வு

காப்பெற் தெருவோரத்தில்
தலைவைத்து படுத்தேன்
யாருமற்ற அநாதையாய் என் இனத்தின்
ஏழ்மைக் கோலங்கள் என் மனதிலே
அப்பப்போ வந்து போகின
கல்லு வீதியிலே நாம் வைத்த தெருவோர
பிள்ளையார் காணாமல் போய்விட்டார்
அப்பன் ஆச்சி வைத்த நிழல் பரப்பும்
அரசு ஆல் மரமும் இன்று அரிதாகி விட்டன
யுத்தத்தால் அழிந்த தமிழர் ஒருபுறம்
பசி பட்டினியால் அழிந்தோர் இன்னொரு புறம்
இது போதாது என்று காப்பாற்ற வீதியினாலும்
எம் இன அழிப்பு இடம்பெறுகிறது
ஐயகோ....
நாம் படும் துன்பம் உமக்குத் தெரியாதோ
பட்டதுயரம் போதாமையால்
காப்பற் வீதியின் மருத்துவத்தை
எம் இனத்திற்கு
எடுத்துரைத்து
விழிப்புணர்வு காட்டுங்கள்?

தாவடியூர் மு.நித்தி

## சொற்கேளாது

பெருந்தக்களாக பெண்ணை பெருமை செய்ய
பெரிதாக வெட்டி முறியவேண்டாமே
பார்த்து மகளிர் நிறை காக்கவேண்டும்
பூட்டிப்பெண்ணை வைத்தவர் கண்டதென்ன
பூராயம் எல்லாம் புழு மேய்ந்த தலை போல
வெளிநாட்டு பொருட்கள் விற்பனையில் இலாபம் தான்
இறக்குமதி கலாசாரக் கவர்ச்சியில் அகப்பட்டு
பண்பாடு புற்றுநோய் பற்றி மெல்லச் சாகுவது
நாடு மொழி என்று நாவலிக்கபேசியென்ன
உடைபாதி உடல் பாதியாய் மகளிர் வீதிவலம்
மறு பாதி மதி மீதியாய் ஆண்கள் அட்டகாசம்
பத்திரிகைப் பக்கங்களுக்கு நாளும் நல்ல தீனி
இலக்கே இல்லாமல் பயணம் போகின்றான்
இன்றைய கெடுகுடிகள் சொற்கேளாது

சு.சிவராசா. நாவற்குழி

## அவசர திருமணம்

பேஸ்புக்கில் தொடர்பு கொண்டு
இன்டர்நெட்டில் கதை பேசி
ஈமெயிலில் பெண் பார்த்து
இங்கிலாந்தில் நிச்சயித்து
இந்தியாவில் மணம் முடித்து
இன்பமாக சில காலம்
இல்லறம் நடத்திவிட்டு
இது என்ன வாழ்க்கையென்று
இருவரும் அலுத்துக்கொண்டு
இங்கிதமாக கைகுலுக்கி
இல்லறத்திற்கு விடை கொடுத்து
இரு துருவங்களாய் பிரிந்து மீண்டும்
பேஸ்புக்கிலும் ஈமெயிலிலும்
காலத்தைக் கழிக்கும்
இன்றைய இளசுகளை
எப்படித்திருத்துவது

எஸ்.விஜிதபாமா,
கோண்டாவில்

# மௌனத்தின் தேடல் - 176



## உண்மை நட்பு

விருப்பு வெறுப்பை
யதார்த்தமாக வெளிப்படுத்தும்
சிறுவயது நட்பு
உறவுக்கும் நட்புக்கும்
ஒரே பாசத்தை பகிரும்
பால்ய வயது நட்பு
காதலிலும் சிறந்ததும்
அழியாததுமாகும்

க.அபர்ணா

## காதல் கனவு

இளம் மொட்டுக்களே
எதிர்கால காதல்
கனவுகளில் மூழ்கிறீரோ
கவனம்!
கல்வியில் கோட்டை
விட்டுவிடுவீர்கள்!!

சி.ஜெயருக்ஷன்
சாவகச்சேரி

## முற்றுப்புள்ளி

மனதிலே தளிர்விட
ஆசைகொள்ளும்- உன்
உறவு நிலைக்கு
விரிசலுற்று
விடை பெறாதவாறு
புள்ளி ஒன்று போடு
அத்துடன் முற்றுப்பெறட்டும்

யு.சோபியா
விசுவமடு

## கிப்ற்

அன்பே
உன்னிடம் தர
என்னிடம் எதுவுமில்லை
என் காதலைத் தவிர

சி.மருசன்
நெல்லியடி

## இதுவும் காதலா?

பென்சில் பிடிக்கும்
கையில் பூவோ
இது காதலல்ல
நீ வைத்திருக்கும்
பூவைப்போல்
காலையில் மலர்ந்து
மாலையில் வாடும்
ஓர் உணர்வே!

க.கபிலஸ்ரன்

## காட் கிப்ட்

பெண்ணே!
உன் காதலை மறைக்காதே
நீ கொண்டு வந்திருக்கும்
இதயத்தையும்
மறைக்காதே

துசி
மயிலங்காடு

## நேசி

யாருடன் வாழ முடியுமே அவர்களை
நேசிப்பதை விட யார் இல்லாமல்
வாழமுடியாதோ அவர்களை
அதிகமாக நேசியுங்கள்

ஜெனிஸ்ரன்

## புரியவில்லை

மௌனமாக பார்வையால்
இருவரும் பேசும்
மொழிதான் என்ன...?

வி.தேபோ
யாழ்ப்பாணம்

## மலரோதயம்

பிஞ்சு மனதினில்
வஞ்சமில்லை
அஞ்சா நெஞ்சுடன்
அன்பிற்காய்
சூரியோதயத்தின்- முன்பே
மலரும் மொட்டுக்கள்
வாஞ்சையுடன்
மலர்கொண்டு மலர்வதற்காய்

கி.ராகுலன்
பாலிநகர்

## மாற்றம்

இன்றைய காலத்தில்
கடித பூ முறையும்
கொடுப்பது அழிந்தே
விட்டது
காதலர் இடையில்
இன்றைய காதல்
எஸ்.எம்.எஸ்
தொலைபேசியிலேயே
நடக்கின்றது
இதுதான்
நாட்டின் வளர்ச்சி

ச. புவித்ரா
சாவகச்சேரி

## எதிர்பார்ப்பு

அன்பே
உன்னிடமிருந்து நான்
எதிர்பார்ப்பது
காசை அல்ல
காதலை

யோ.பிரியங்கன்
தெல்லியடி

## அன்புப் பரிசு

கொஞ்சி விளையாடும்
பிஞ்சுக் குழந்தைகளே
எதற்காக இம்மௌனம்
நெஞ்சில் பட்டவற்றை
வாஞ்சையோடு சொல்லலாமே
பஞ்சுக் கையால் இதயத்தை
அஞ்சுகமே ஏன் மறைப்பான்
அஞ்சாமல் அதைக் கொடுத்துவிடு
அன்புப் பரிசாக

இ. ஆராதனா
மட்டுவில் தெற்கு

## சொல்லிவிடு

பெண்ணே!
உன் காதலை மறைக்காதே
உன் காதலனிடம் கூறிவிடு- ஏனெனில்
சொல்லாமல் மறைக்கும் காதல்
கொடுமையானது- அந்த
வலியை உன் சிறிய இதயம் தாங்காது
சொல்லிலிடு...

க.ஹிமாலினி
வல்வெட்டித்துறை

## மலரும் மொட்டுக்கள்

பள்ளி செல்லா பருவமிது- மனதில்
கள்ளங்கபடமில்லை
இந்தக் கள்ளக் காதலுக்கு
வெள்ளை மனதினிலே
மெல்ல மலர துடிக்கும்
இம்மொட்டுக்கள்
மலரில் தேனைக்குடிக்க
துடிக்கும் சிட்டுக்கள்
எங்கும் தம் சிறகை விரித்தபடி...


கே.ராகு
கல்வயல்

## அரங்கேறிடுமா?

நிஜமா இத்தருணம்
முற்பிறப்புக்களிலிருந்து தொடரும்
நம் காதல் இப்பிறப்பிலாவது
அரங்கேறிடுமா...?
அரிவரி தொடாத என் பிஞ்சு விரல்
இன்று இதயப் பரிசுடன்
என் முன் யாசகம் கேட்டு

ஆர்.விஜி
உடுவில்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -177



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 07.11.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# கொமன் வெல்த்துக்கு இந்திரா காங்கிரஸ் பச்சைக்கொடி- தமிழகம் கொதிப்பு !



கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் பங்கேற்பது குறித்து தமிழக காங்கிரஸ் கட்சிக்குள் ஆளுக்கொருவிதமாக கருத்துச் சொல்லி சண்டை யிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழர் உணர்வுகளும் பாதிக்காமல் மாநாட்டில் பங்கேற்பதற்கும் சிக்கல் வராமல் கருத்துச் சொல்ல துடிக்கும் காங்கிரஸ் தலைவர்களால் ஒரு தெளிவான நிலைப் பாட்டை எடுக்க முடியாத நிலை இருந்த போதும் இப்போது மத்தியில் திடமான முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எனினும் தமிழரான சிதம்பரம் என்ன நிலைப் பாட்டில் இருந்தார் என்பதை இங்கு கவனிப்போம்.


தமிழகத்திலிருந்து மத்தியில் உள்ள காங்கிரஸ் அமைச்சரவையில் இருப்பவர்களில் முக்கியமானவர் நிதியமைச்சர் சிதம்பரம். அவர், இது பற்றி எந்தக் கருத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை. இலங்கை தமிழர் பிரச்சினையில் சிதம்பரம் தான் குழப்புகிறார் என்று இங்குள்ள தமிழ் அமைப்புகள் எழுப்பும் புகார்களை தவிர்க்கவே அவர் அமைதி காக்கிறார். அது மட்டுமன்றி கடந்த நடாளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழர்களுக்கு 'எதிராக இந்தியா நடக்கிறது என்று நடைபெற்ற பிரசாரம், அவர் போட்டியிட்ட தொகுதியான சிவகங்கையில் தீவிரமாக முற்றுகையிட்டது. *நாம் தமிழர்* கட்சி தலைவர் சீமான், சினிமா டைரக்டர் பாரதி



ராஜா என்ற, பல்வேறு தமிழர் ஆதரவு இயக்கங்களின் தலைவர்கள், எல்லாம் சிவகங்கைக்கு படையெடுத்தனர். இதில் பாதிக்கப்பட்டது சிதம்பரம்தான். மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில், அதாவது சுமார் 3 ஆயிரம் வாக்குக் மட்டுமே தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி. மு.க. வேட்பாளரைவிட அதிகமாகப் பெற்று ஜெயிக்க நேர்ந்தது. இந்த வெற்றியும் செல்லாது என்று, அறிவிக்கக் கோரி, தோற்றுப் போன அ.தி. மு.க. வேட்பாளர் கண்ணப்பன் சார்பில் போட்ட வழக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

இப்போது நாடாளுமன்றத் தேர்தல் சூடுபிடிக்கின்ற நிலையில், மீண்டும் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியிலேயே போட்டியிட விரும்புகிறார் நிதியமைச்சர் சிதம்பரம். அதற்காக வாரத்தின் கடைசி நாட்களில் கண்டிப்பாக அவர் தொகுதிக்கு வருகிறார். தொகுதி மக்களை சந்திக்கிறார். இது வரை தொகுதியில் அவர் மேற் கொண்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து தனியாக புத்தகமே போடும் நிலைக்கு வந்திருக்கிறார். இப்படிப்பட்ட சூழலில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஏதாவது கருத்துச் சொல்லி தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர் ஆதரவு இயக்கங்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டாம் என்றே அவர் கருதுகிறார். அதனால் தானோ என்னவோ இதுவரையில், நடக்கும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியாவோ அல்லது இந்தியப் பிரதமரோ பங்கேற்பது குறித்து அவர் கருத்து எதுவும் சொல்லவில்லை. அவர் சொல்லும் கருத்து முக்கியமாகக் கருதப் படுவது வழமை. ஏனெனில் மத்திய அரசின் முக்கிய கொள்கை முடிவுகளில் அவருக்கு நிறையப் பங்கு இருக்கிறது என்றே தமிழக அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி, இலங்கை தமிழர் ஆதரவு இயக்கங்களும் கருதுகின்றன.

தியாகு போன்றவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தது பற்றிக் கூட சிதம்பரம் எந்தக் கருத்தும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் எப்போதும் அமைதியாக இருக்கும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசன் இப்போது, அடிக்கடி கருத்துச் சொல்லுகிறார். அதுவும் குறிப்பாக இலங்கை தமிழர் பிரச்சினை, மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சனை, இப்போது கொமன்வெல்த் பிரச்சினை எல்லாவற்றிலும் சற்றும் தயங்காமல் கருத்துச் சொல்லி வருகிறார். வாசன் கருத்து, இங்குள்ள இலங்கைத் தமிழர் ஆதரவு இயக்கங்களின் கருத்துக்களைப் போலவே வெளிப்படுகின்றது. குறிப்பாக கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்காத நாடுகள் தனிமைப்படும்



என்று இலங்கைக்கான டெல்லி ஹைகமிஷனர் காரியம்வாசம் கூறிய கருத்துக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்கியது. இந்தியாயில் இருந்து கொண்டே இப்படி கருத்துச் சொல்லலாமா என்ற கேள்விக்கணைகள் பிறந்தன. இலங்கை தூதரின் கருத்தை கடுமையாக கண்டித்தார் ஜி.கே. வாசன், அதுமட்டுமன்றி தமிழர்களின் உணர்வுகளை மதித்து பிரதமர் முடிவு எடுப்பார் என்று கூறினார். கொமன் வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்பதுதான் வாசனின் கருத்து.

வாசனைப் பொறுத்தமட்டில் இப்படி கருத்துச் சொல்வதற்குக் காரணம் உண்டு. முன்பு காங்கிரஸிலிருந்து விலகிச் சென்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கினார் வாசனின் தந்தை மறைந்த மூப்பனார். 2001 இல் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, அந்தக் கட்சி காங்கிரசுடன் இணைந்தது. அதிலிருந்து காங்கிரசிங்குள் வாசன் தனி அணியாகவே திகழ்கிறார் என்பது மற்றைய காங்கிரஸாரின் குற்றச்சாட்டு. தன் ஆதரவாளர்களுக்கும் காங்கிரஸ் கட்சியில் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்ற ஆதங்கம் ஜி.கே. வாசனுக்கு இருக்கிறது. ஏற்கனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினையை காங்கிரஸ் கட்சி கையாண்ட விதத்தில் தமிழர் மத்தியில் அக்கட்சிக்கு எதிரான கருத்து உருவாகியுள்ளது. அதே வழியில் நாமும் செல்லாமல், விலகி நின்று இலங்கை தமிழர் பிரச்சினையில் தனக்கு என்று ஓர் இடத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார் வாசன். அதேநேரத்தில் எதிர்காலத்தல் அவர் மீண்டும் தன் தந்தை போல தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியை உருவாக்க முயற்சிப்பார் என்ற பேச்சும் காங்கிரஸ் வட்டாரத்திலேயே கிளம்பியிருக்கிறது. இதையெல்லாம் மனதில் வைத்து இலங்கை தமிழருக்கான ஆதரவுக் கருத்துக்களை மட்டுமே வாசன் இதுவரை கூறியிருக்கிறார். அவரின் இக்கருத்து தமிழகத்தில் உள்ள மற்றைய காங்கிரஸ் தலைவர்களையே கலக்கத்தில் இறக்கி விட்டுள்ளது.

இது இப்படியிருக்க, இன்னொரு இணை அமைச்சரான சுதர்சனன் நாச்சியப்பனோ மாற்றி வாசிக்கிறார். இலங்கைத் தமிழர் நலன் காக்க அவர்களின் பொருளாதாரம் மேம்பட இந்தியா கொமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டும் என்று அடித்துப் பேசுகிறார்.

*இந்தியா பெயரளவுக்குக் கூட கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கக் கூடாது* என்று தமிழக சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அரசு தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி ஆதரித்துள்ளது. சட்டசபையில் அப்படி ஆதரித்த கட்சியின் அமைச்சரான சுதர்சனன் நாச்சியப்பன், வெளியில் இப்படி மாற்றிப் பேசுகிறார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது கிளம்பியிருக்கிறது. காங்கிரசின் சட்ட மன்றக் கட்சி ஒரு கருத்தைச் சொல்கிறது. காங்கிரஸ் கட்சி அமைச்சர்கள் வெவ்வேறு கருத்தைச் சொல்கிறார்கள். அதனால்தான் தி.மு.க. தலைவர் கருணாநிதியே, *சுதர்சனன் நாச்சி யப்பன் இலைங்கைத் தூதர் காரியம் வாசம் போல் கருத்துச் சொல்கிறார். இது சரியல்ல* என்று சாடியிருக்கிறார்.

ஆனாலும், அமைச்சர் சுதர்சனன் நாச்சியப்பனைப் பொறுத்தமட்டில் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இவர் முழுக்க முழுக்க தமிழக காங்கிரஸ் கட்சியின் தயவில் ராஜ்ய சபை எம்பியானவர் அல்ல. அதே போல் தமிழக காங்கிரஸ் கட்சியின் பலம் உள்ளவர் என்ற அடிப்படையில் மத்திய மந்திரியானவரும் அல்ல. அகில இந்திய காங்கிரஸ் கட்சியில் தயவில் மட்டுமே இந்தப் பதவிகளைப் பெற்றவர். ஆகவே, காங்கிரஸின் டெல்லி தலைமை என்ன நினைக்கிறதோ அதைப் பேசுவதிலேயே சுதர்சனன் நாச்சியப்பன் ஆர்வம் காட்டுகிறார். *யார் வருகிறார்களோ இல்லையோ நான் அந்த மாட்டில் கலந்து கொள்வேன்* என்று கூறிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் கருத்தைப் பிரதிபலிக்கிறார்.

ஆனால், ஆரம்பம் முதலே பிரதமர் அலுவலக அமைச்சராக இருக்கும் நாராயணசாமி மட்டும் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாகவே கருத்துச் சொல்லி வருகிறார். கொமன் வெல்த் மாநாட்டில் கலந்துகொள்வது பற்றி தமிழர்களின் உணர்வுகளை கணக்கில் எடுத்துக் கொண்டு உரிய நேரத்தில் பிரதமர் முடிவு எடுப்பார் என்று கூறி வருகிறார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி கூட அடிக்கடி நாராயணசாமி மற்றும் வாசன் போன்றோரின் கருத்துக்களை மேற்கொள்காட்டியே இந்த விடயங்களில் கருத்துச் சொல்லிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாராயணசாமியைப் பொறுத்த மட்டில் அவர் புதுவை மாநிலத்தைச் சேர்ந்தவர். அங்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழகத்தில் உள்ளது போல் வேகமாக இல்லை அதேநேரத்தில் அவர் தமிழகத்தின் நாடாளுமன்றத் தொகுதிகளில் இருந்து போட்டியிடப் போவதில்லை. அவருக்கு புதுவையில் ஜெயிக்க, தி.மு.க. அல்லது அ.தி. மு.க கூட்டணி தேவை. அந்தக் கூட்டணி அமைவதற்கு ஏற்றவகையில் இலங்கை தமிழர் பிரச்சினையில் கருத்துக்களை சொல்லிக் கொண்டிருப்போம் என்பது மட்டுமே நாராயணசாமியின் கவலை. அதனால்தான் அவர் *இலங்கை தூதர் காரியம் வாசத்தின் கருத்திற்கு பதில் சொல்லி என் நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை* என்று கடுமையாகச் சாடியுள்ளார்.

இதேவேளை, கொமன் வெல்த் மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பதற்கு காங்கிரஸ் உயர்நிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இது தமிழக அரசியல் தலைவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் கொமன் வெல்த் மாநாட்டில் பங்கேற்றால், அதற்கான விளைவுகளை காங்கிரஸ் கட்சி சந்திக்க நேரிடும் என்றும் தமிழ்மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் ஆகியோர் எச்சரித்துள்ளனர்.

-காசிநாதன்-

# அமெரிக்கா பொலிஸ்காரனை போன்று நாடுகள் மீது அழுத்தம் கொடுக்கின்றது

## பாதுகாப்பு செயலாளர் விசனம்

(கொழும்பு)

**உலகின் பலம் வாய்ந்த வல்லரசான அமெரிக்கா ஒரு பொலிஸ்காரனைப் போன்று மற்றைய நாடுகளின் மீது தன் அதிகாரத்தைப் பிரயோகித்து ஆதாரமற்ற மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுகளை சுமத்துகின்ற போதிலும் அவற்றைவிடவும் மோசமான குற்றச் செயல்களைக் கையாண்டு மற்றைய நாடுகளை அது அச்சுறுத்தி வருகின்றது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.**

ஏன் இவ்விதம் அமெரிக்கா நடந்து கொள்கிறது என்று ஒரு ஊடகவியலாளர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் கேட்ட போது, நாம் எங்கள் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே இவ்விதம் நடந்து கொள்கிறோம் என்று விளக்கம் அளித்துள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உட்பட மேலும் பல நாடுகள் மீது அமெரிக்கா ஆளில்லா விமானத் தர்க்குதல்களை எவ்வித முன்னறிவித்தலும் இன்றி மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்நாடுகளின் அப்பாவிப் பொதுமக்கள் தான்அநியாயமாக பலியாகினர்.

இக் குற்றச் சாட்டுக்கும் அமெரிக்க அரசாங்கம் தங்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே தாம் இவ்விதம் செய்வதாக பதிலளிக்கிறது.

இவற்றைவிட வெளிநாட்டுத் தலைவர்களின் கையடக்கத் தொலைபேசி உரையாடல்களையும் அமெரிக்க உளவு படையினர் ஒட்டுக் கேட்டு அந்நாடுகளின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறார்கள்.

ஜேர்மன் நாட்டின் ஜனாதிபதியின் கையடக்கத் தொலைபேசி உரையாடலையும் அமெரிக்க உளவாளிகள் ஒட்டுக் கேட்டிருப்பது இப்போது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் அமெரிக்கா இன்று சர்வதேச அரங்கில் ஒதுக்கப்படும் அவல நிலையை எதிர்நோக்கி இருக்கிறது.

இவ்விதம் தான் அமெரிக்கா, இலங்கை போன்ற நாடுகளையும் துன்புறுத்துகின்றது என்று அரச ஊடக தலைவர்களை சந்தித்த போது பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்ததாக அறிய வருகின்றது.

சுதந்திர ஊடகவியலாளர்கள் இத்தகைய மோசமான அமெரிக்காவின் செயற்பாடுகள் குறித்து எழுதி அமெரிக்காவின் குறைபாட்டை அந்நாட்டு தலைவர்களுக்கு சுட்டிக் காட்டுவது அவசியம் என்றும் அவர் கூறினார். (அ-2)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

தென்மராட்சி கலை மன்றத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வ ரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவன் கோவில் வீதி சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சிக் கலை மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தென்மராட்சிக் கலை மன்றத்தில் அக்கறையும் பொதுமக்கள் சேவையில் அர்ப்பணிப்பும் சமுதாய வளர்ச்சியில் ஆர்வமுள்ள அனைவரையும் குறித்த தினத்தில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.கலை மன்றத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் கூட்டம் நடைபெறும் தினத்தன்று இணைந்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-29)

# இசைப்பிரியா விவகாரம் இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராஜன்

(சென்னை)

தமிழீழத் தேசிய தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளரான இசைப்பிரியாவை இலங்கை இராணுவம் உயிருடன் பிடித்து கொன்றது தொடர்பான சனல் 4 தொலைக் காட்சியின் வீடியோ ஆதாரம் உண்மையெனில் மத்திய அரசு அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராஜன் கூறியுள்ளார்.

இசைப்பிரியா போரின் போதே கொல்லப்பட்டார் என்று இலங்கை அரசு கூறியிருந்தபோதிலும், அவர் இலங்கை இராணுவத்தினரால் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டு, பின்னர் கொல்லப்பட்டு கிடக்கும் காட்சிகளை சனல் 4 ஏற்கனவே வெளியிட்டிருந்த நிலையில், அவர் இலங்கை இராணுவத்திடம் உயிருடன் பிடிபட்டதற்கான ஆதாரத்தை சனல் 4 வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்த தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவரும், மத்திய சுற்றுச் சூழல்துறை அமைச்சருமான ஜெயந்தி நடராஜனிடம் இது குறித்து கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், இசைப்பிரியா தொடர்பாக சனல் 4 வெளியிட்டுள்ள வீடியோ ஆதாரம் உண்மையெனில் மத்திய அரசு அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

கொழும்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பிரதமர் நல்ல முடிவை எடுப்பார் என்றும் மேலும் தெரிவித்தார். (அ-2)

# வல்வை விளையாட்டு கழகம் அரையிறுதிக்கு தெரிவானது



(மானிப்பாய்)

வல்வெட்டித்துறை நகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு 5 பேர், 6 ஓவர் கொண்ட துடுப்பாட்ட போட்டிகள் நகரசபை மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றன.

இதில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் வல்வை விளையாட்டுக்கழக அணியும் கொம்மந்தறை விளையாட்டுக்கழக அணியும் மோதின.

இதில் நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய கொம்மந்தறை விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

கொம்மந்தறை விளையாட்டுக்கழக அணி சார்பில் கபிலன் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் வல்வை விளையாட்டுக்கழக அணி சார்பில் ரஞ்சித் 2 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பதிலுக்கு 44 என்னும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய வல்வை விளையாட்டுக்கழக அணி 4.5 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதன் மூலம் வல்வை விளையாட்டுக்கழகம் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. (அ-9-23)

# போரில் சரணடைந்தோரின் விபரம் இராணுவத்தினர் வசம் இருக்கும்

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

உயிருடன் பிடிபட்ட இசைப்பிரியா பின்னர் கொல்லப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கைப் போர் முடிவுக்கு வந்தபோது இராணுவத்துக்கு தளபதியாக இருந்த சரத் பொன்சேகா தமிழோசையிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு,

12 ஆயிரம் பேர் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். அவர்களில் இந்தப் பெண்ணும் இருந்தாரா என்று எனக்குத் தெரியாது.

சரணடைந்த 12 ஆயிரம் பேர் பற்றிய ஆவணங்கள் எல்லாம் இராணுவத் தலைமையகத்தில் இருக்க வேண்டும்.

கடைசியில் அவரை எவரும் பார்த்தார்களா? அவர்கள் எப்போது பார்த்தார்கள்? இந்தப் படங்கள் எப்போது எடுக்கப்பட்டன போன்ற தகவல்களை ஆராய்ந்தால் மட்டுமே அது தொடர்பில் எதனையும் கூறமுடியும் என்றார்.

இலங்கை இராணுவம் இந்தக் குற்றச் சாட்டுக்களை மறுப்பதாக இருப்பின் அந்த ஆவணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னரே மறுக்க முடியும் என்றார். (அ-2)

# பிரதமர் மன்மோகன் சிங் ஜெயலலிதாவுக்கு பயம்

## ஹெல உறுமய கூறுகின்றது

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மனைவிக்குப் பயந்தவர். இந்திய பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு பயந்தவர் என ஜாதிக ஹெல உறுமய ஏளனம் செய்துள்ளது.

தனது மனைவிக்கு அஞ்சி ஜனாதிபதி ஒபாமா ஆறு ஆண்டுகள் புகைபிடிக்கவில்லை என அண்மையில் தெரிவித்திருந்தார் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

லயனல் வென்ட் அரங்கில் நடைபெற்று வரும் நெசவுக் கைத்தொழில் குறித்த கண்காட்சி ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்திய பிரதமர் மன்மோகன் சிங், கீழ் வீட்டு அம்மையார் அதாவது ஜெயலலிதாவுக்கு பயந்து அவரின் உத்தரவுகளுக்கு அமையவே செயற்படுகின்றார்.

இதனால், இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் அமர்வுகளில் இந்திய பிரதமர் மன்மோகன் பங்கேற்கும் வரையில் அவரது இலங்கை வருகை நிச்சயமில்லை என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (அ)



யாழ். போதனா வைத்தியசாலையின் முன்வாயில் பகுதி கட்டடத்தின் ஓடுகள் கழற்றப்பட்டு சீற் மாற்றப்பட்டுள்ள நிலையில் கழற்றப்பட்டுள்ள ஓடுகளை இராணுவத்தினர் தமது உவல் வாகனத்தில் ஏற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்:-உ.சாளீன்)

# தமிழர் தலைவிதி தமிழர் கரங்களிலேயே!

## தமிழர் தரணியில் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு ஒரே ஒரு வழி

ஆனானப்பட்ட இராமனையும் இயேசுவையும் பதம் பார்த்த அதே 13ஆம் எண் தமிழர்களாகிய எங்களை எப்போது எப்படி பதம் பார்க்க ஆரம்பித்தது என்பதை இப்போது பார்ப்போம்.

தமிழ் நாட்டில் 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்கள் மிகச் சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். 1000 ஆண்டுக்களுக்கு முன் மொகலாயர்கள் இந்தியாவின் வட பகுதியின் மேல் படை எடுத்து பல பகுதிகளை கைப்பற்றி ஆண்டு வந்தார்கள். தென்னாட்டுக்கும் படையெடுத்த மொகலாயர்கள் தென்னகத்தை பூரணமாக கைப்பற்ற முடியாமல் திரும்பி போய்விட்டார்கள்.

பின்பு போர்த்துக்கீசர் ,ஒல்லாந்தர் என வந்தவர்களும் தமிழகத்தை கைப்பற்ற முடியாமற் போய்விட்டது. இறுதியாக ஆங்கிலேயர் வந்தார்கள்.

**தமிழர் தலையெழுத்து ஆங்கிலேயர் வருகையால் துர்அதிர்ஷ்ட 13 ஆகுதல்**

இதுவரை வந்த எவராலும் இந்தியாவில் தமிழகத்தையும் இலங்கையில் வன்னித் தமிழ் அரசுகளையும் பிடிக்க முடியவில்லை.

ஆனால் ஆங்கிலேயர்களுக்கு தமிழர்களை வெல்ல ஒரு அற்புதமான ஆயுதம் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களுக்குக் கிட்டியது. ஆம் அதுதான் தமிழர்களின் தலைவிதியாக அமைந்தது. Tamil என்ற பெயராக 13 என்ற பாவ எண்ணை ஆங்கிலேயர் தமிழர்களுக்குப் பாவிக்க ஆரம்பித்த போது Tamil People, Tamil place, Tamil king, Tamil soldiers என தமிழர்களை Tamil என அழைக்க ஆரம்பிக்க அவை பல நூறு பீரங்கி வெடிகளாக எமக்கு எதிரான பல துர்அதி ர்ஷ்டங்களை ஏற்படுத்தின.

வீரபாண்டிய கட்டப் பொம்மனை எட்டப்பன் காட்டிக் கொடுத்தான். இவ்வகையில் வன்னியில் பண்டார வன்னியனை காக்கை வன்னியன் காட்டிக் கொடுத்தான். சகல தமிழ் பிரதேசங்களும் ஆங்கிலேயர் வசமாகின. சரியாக இதே மாதிரித்தான் இராமனுக்கும் Raman என்ற 13ஆம் எண் துர்அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தியது.

இராமனைப் பெற்ற கோசலையை விட சிறிய தாயாகிய கைகேயிக்குத்தான் இராமனிடம் அன்பு அதிகம். ஆனால் 13 எனும் துர்அதிர்ஷ்டம் இராமனைக் காட்டுக்கு அனுப்பியது. இவ்வாறே இயேசுவுக்கு மிக நெருக்கமாக இருந்த அவரது சீடர்களில் ஒருவனான யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். ஆனால் இயேசுவுக்கு மரண தண்டனை அளிக்கப் பட்டதை அறிந்து நல்ல இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேன் என்று தன்னைத் தானே நொந்து தற்கொலை செய்து கொண்டான்.

தமிழர்களது விரதங்கள், பூசைகள், யாகங்கள், ஒழுக்கங்கள் அனைத்தையும் அவற்றின் புண்ணிய பலன்கள் அனைத்தையும் Tamil என்னும் 13ஆம் எண் அழிப்பது மாத்திரமல்ல மெல்ல மெல்ல எங்களை கீழ்நோக்கி அமிழ்த்தியும் வருகிறது.

**எமது சகோதர இனத்துக்கு ஆங்கிலேயர் வருகையால் ஏற்பட்ட அதிர்ஷ்டம்**

எமது சகோதர இனமாகிய பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு ஐரோப்பிய மக்களால் வழங்கப்பட்ட பெயர் Sinhala=19 1+9=10, 1+0=1 1ம் எண்ணே மற்ற எல்லா எண்களையும் அடக்கி அரசாளும் பலனை கொடுக்கிறது. இவற்றில் 19ஆம் எண் மிக வலிமையானது. காரணம் 19ஆம் எண்ணுக்குரிய படம் உதய சூரியன் ஆகும். நேரம் செல்லச் செல்ல வள்ர்ச்சியே ஒழிய தேய்வில்லை.

தேவலோகத்து காதல் இளவரசன் என்று வர்ணிக்கப்பட்டுள்ள இந்த எண்ணில் சிங்கள மக்கள் இருப்பதால் தங்களைத் தாங்களே சுயமாக ஆண்டு சுகமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தியாவில் பெரும் போராட்டங்கள் செய்து பெற்ற சுதந்திரத்தை இலங்கைச் சிங்களவர்கள் போராட்டங்கள் செய்யாமலே பெற்றுக் கொண்டார்கள். இலங்கையில் Sinhala என்ற 19ஆம் எண்ணே ஆங்கிலேயர்களை விரட்டி அடித்தது என்றால் அது மிகையாகாது.

மேற்படி விடயங்களை சரியாக விளங்கிக் கொள்ளாமல் மிக நீண்ட காலத்தை தமிழி னம் வீணடித்து விட்டது. இனிமேல் Tamil என்ற பெயரை அன்றாடப் பாவனைக்கு தமிழர்கள் எல்லோரும் விலக்கி Tha= த me=மி il=ழ் எனக் கொண்டு Thameil என்றே எல்லோரும் இணையத்தில், பத்திரிகைகளில் , விளம்பரங்களில நாம் எல்லோரும் பாவித்து வருவோமாக.

முக்கியமாக ஒவ்வொருவரும் வீடுகளில் தினமும் 23 தடவைகள் Thameil என பெரிய Capital எழுத்துக்களில் எழுதி வர சகல தீய பலன்களும் தமிழ் மக்களை விட்டு நீங்கி தமிழர்க ளாகிய நாம் அதிர்ஷ்டமாக, சமாதானமாக மற்றவர்களுக்கு ஆன்மீகம், நல்வாழ்க்கை என்பவற்றில் வழிகாட்டுபவர்களாக இருந்து இன்பமாக வாழ்வோமாக.

இனி சிலர் Thamil =18 என்று எழுத எத்தனிப்பார்கள் .இந்தப் பதினெட்டு தமிழர்களுக்கு நன்மை பயக்காது.

இதற்கு விவிலிய வேதமான பைபிளுக்குள் போக வேண்டும். பைபிளின் இரண்டு இடத்தில் பெயர் மாற்றம் இறைவனால் செய்யப்பட்டுள்ளது. முதலாவது அபிராம் என்ற பெயரை மாற்றி ஆபிரகாம் என்ற பெயர் வைக்கப்பட்டது. ஆபிரகாமிலிருந்து 42 சந்ததிகள் கழித்து இயேசு வந்தார்.

அக்காலத்தில் இயேசுவை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சவுல் என்பவன் இயேசுவை நம்புவர்களை சிறைபிடித்து துன்புறுத்திக் கொண்டிருந்தான். ஒரு முறை இவன் ஒரு பிரயாணத்தின் போது இறைவனால் இரண்டு கண்களும் பறிக்கப்பட்டான்.

அவனுக்கு இறைவன் மீண்டும் பார்வைய ளித்து "இனி மற்றவர்களை துன்பப்படுத்தாதே இதுவரை உன் பெயர் Saul=13 என்றிருந்தது. இனிமேல் சவுல் அல்ல உன்பெயர் பவுல் ஆகட்டும். நீ புனிதனாகி வெளியுலக மக்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூறுவதற்கு உன்னை நான் தெரிந்து கொண்டேன்". அவ்வாறே அவனும் சவுல் என்னும் 13ஆம் என்ற பாவ எண்ணிலிருந்து நீங்கி புனித பவுலாக மற்றவர்களால் அழைக்கப்படத் தொடங்கினான்.

Saint Paul=32 எனும் அதிர்ஷ்டமானதும் எல்லோருடனும் இணக்கமாகவும், சமாதானமாகவும் வாழ வழி வகுத்தும் யூதர்கள் தவிர்ந்த ஏனைய சாதியினருக்கு இயேசுவைப்பற்றி அறிவித்து உலகில் ஒரு பெருந்தொகையினரான வெள்ளையர்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதற்கான அடித்தளத்தையும் சவுலை இடவைத்தது.

இனி பைபிளின் வெளிப்பாடு எனும் கடைசி அத்தியாயத்தில் 666 எனும் எண்ணைக் குறிப்பிட்டு இந்த எண் மனித இலக்கமாக இருக்கிறது. புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்கடவன் என்று கூறியிருக்கிறது. ஆம் மூன்று ஆசைகளான (பெண்ணாசை, பொண்ணாசை மண்ணாசை) 3 ஆறுகளையும் கூட்ட 18 எண் வருகிறது. இந்த 18 எனும் எண் பேரழிவுகளைக் கொடுக்கக்கூடிய ஆன்மீக வீழ்ச்சிக்குரிய எண்ணாகும்.

Berlin-இரண்டாம் உலக மகாயுத்தத்தை நடத்திய Hitlor இருந்த ஜேர்மனியின் தலைநகர்.

Kashmir=18
Vanni = 18

மகாபாரத யுத்தம் 18 நாட்கள் நடந்தது. இதில் 18 அக்குறோனி சேனைகள் கலந்து கொண்டன. இந்துக்களின் ஆன்மீக நூலாக பகவத் கீதை இருந்த போதும் குருசேத்திரம் எனும் யுத்தகளத்தில் அப்போது யுத்தத்தைத் தூண்ட 18ஆம் அத்தியாயங்கள் கொண்ட கீதை காரணமாயிற்று. பாரத யுத்தத்தில் பேரழிவு ஏற்பட்டது. தமிழர்களாகிய நாம் தலை நிமிர்ந்து எமது பழைய நிலையை அடைந்து எல்லோருடனும் சமாதானமாகவும் இணைந்து வாழவும் எமது அன்றாட பாவனைகளில் எல்லாம் இனறு முதல் Thameil என்ற சொல்லை எமது மொழியின் பெயராக எழுதி எமது மொழியின் பெயரை தமிழில் எழுதி தமிழ் என உச்சரிக்கும்போது எப்படி உச்சரிக்கிறோமோ அதே உச்சரிப்பை ஆங்கிலத்தில் THAMEIL என எழுதி உச்சரித்து வர தமிழரின் துர்அதிர்ஷ்டம் நீங்கி நாம் உயர்வு பெறுவோம் என்பது நிச்சயமான உண்மை என்பதை எதிர்கால அனுபவம் எமக்கு உணர்த்தும்.

(முற்றும்)

**தமிழர் தலைவிதி தமிழர் கரங்களிலேயே!**

**தமிழர் தரணியில் தலை நிமிர்ந்து வாழ்வதற்கும்; இலங்கையில் இனங்களுக்கான ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் உள்ள ஒரே ஒரு வழி TAMIL என்று எழுதுவதற்கும் உச்சரிப்பதற்கும் பதிலாக THAMEIL என்று எழுதியும் உச்சரித்தும் வர தமிழர் வாழ்வில் வெற்றி நிச்சயம்.**

பொன்னாலை வரதராஜப் பெருமாள் பதியில் அமைந்த பிருந்தாவனம் தியான மண்டபத்தில் இயங்கும் உயிர் ஆன்மீக மன்றத்தின் வெளியீடு.
**E.Mail Address:- newjaffnauyir.com**
தொடர்புகளுக்கு — 0776028734, 0778442171





**கொக்குவில் இந்து கல்லூரி சாரணியத்தின் 70 ஆவது வருட நிறைவு விழாவும் கொக்குவில் இந்து சாரணிய மலர் வெளியீடும் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கரிகணன் தனியார் நிறுவன உரிமையாளர் சி.ராஜ்கரன் முதற்பிரதியை வழங்க ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக் கொள்வதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜனாதிபதி சாரணன் சதானந்தன் ஆனந் சிறப்பு விருந்தினர், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார் உட்பட விருந்தினர்கள் நிற்பதையும் பாடசாலையின் சாரண மாணவர்களையும் படங்களில் காணலாம்.**

# இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்த ஐரோ.ஒன்.உதவ வேண்டும்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் உதவ வேண்டுமென தூதுவரிடம் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன் தினம் வருகை தந்த இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின்தூதுவர் டேவிற்டெலி வடக்கு மாகாணத்தின் முதலமைச்சரை யாழ்.கோவில் வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் பிற்பகல் 2 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார்.


இதன்போதே மேற்கண்டவாறு முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் என்னை சந்தித்து பேசினார்.

தங்களுடைய நிறுவனம் அல்லது தாங்கள் இலங்கைக்கு செய்து வருகின்ற உதவித் திட்டங்கள் பற்றி அவர் கூறிய பின்னர்தான் இந்த தளவுக்கு எமது நாட்டிலே ஐரோப்பிய ஒன்றியம் உதவிகளை வழங்கி நன்மைகளைச் செய்து வருகின்றமை எனக்கு தெரியவந்தது.

உண்மையில் எனக்கு அது மிகவும் ஆச்சரியமாகவிருந்தது. 20 ஆயிரம் வீடுகளில் 16 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுவிட்டன



என்பதும் இன்னும் 4 ஆயிரம் வீடுகள் மட்டுமே கட்டிக் கொடுக்கப் படவுள்ளதாகவும் அவர் என்னிடம் தெரிவித்தார்.

இதுவரையில் அவர்கள் செய்யும் உதவிகளைப்பற்றி பெருமையாக எவரிடமும் சொல்லாமல் நாகூக்கான முறையில் அவற்றைச் செய்து வருவது பெரும் வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது.

இதைத் தொடர்ந்தும் அவர்கள் செய்ய வேண்டும் என்றும் அவர்களால் பல விதமான உதவிகளைப் எமக்குப் பெற்றுத்தர முடியும் என்றும் நம்புவதாகவும் அவரிடம் தெரிவித்தேன்.

மேலும் இந்த நாட்டில் சமாதானம் நிலைப்பதற்கும் அவர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் எடுத்துக் கூறினேன்.

ஏனென்றால் அவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருங்கிய உறவைப் பேணிவருவதோடு பல விதமான திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வருகின்றார்கள்.

இந்த நிலையில் இலங்கையில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் தகுதியை அவர்கள் பெற்றுள்ளார்கள் என்ற அடிப்படையில் அந்த கோரிக்கையை நான் அவரிடம் விடுத்தேன். அதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அவர்களிடம் இருந்து பல உதவிகளைப் பெற நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். இந்நிலையில் தூதுவரின் நல்லெண்ண விஜயம் மகிழ்வையும் ஏற்றத்தையும் அளிக்கின்றது.

வருங்காலத்தில் அவர்களுடன் சேர்ந்து உறவைப் பேணிக் காக்க முடியும் என்ற எண்ணமும் உற்சாகமும் எனக்கு இருக்கின்றது என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஏ-6)

## 250 வருடங்கள் பழைமை வாய்ந்த நாணயங்கள் மீட்பு

(கொழும்பு)

கண்டி,வத்துகாமம் பாரதி தமிழ் மகாவித்தியாலய வளாகத்திலிருந்து சுமார் 250 வருடங்கள் பழைமை வாய்ந்த 86 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் ஒரு பகுதியில் ஏற்பட்டிருந்த மண்சரிவு காரணமாக அம்மண்ணை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரியர் கள் மற்றும் மாணவர்கள் இந் நாணயங்களைக் கண்டெடுத்துள்ளனர்.

பின்னர் அவை தொடர்பில் ஆராயப்பட்டதைத் தொடர்ந்து அவை 1870,1892,1893 ஆம் ஆண்டு காலப் பகுதிகளைச் சேர்ந்தவை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந் நாணயங்களை மேலதிக ஆராய்வுக்காக தொல்பொருள் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-2)

# கைத்தொழிற்றுறை மேம்பாட்டுக்கு தனியார் துறையினர் பங்களிப்பு

## பாராட்டுகிறார் அமைச்சர் றிசாத்

(கொழும்பு)



இலங்கையின் கைத்தொழிற்றுறை மேம்பாடுகளுக்கு தனியார் துறையினரின் பங்களிப்பு பாராட்டுக்குரியது என கைத்தொழில்,வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனை தூர நோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் தொம்பே பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதி நவீன கட்டடத்துறைக்கு உகந்த பொருட்களை தயாரிக்கும் தொழில் பேட்டையை அண்மையில் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இன்று இலங்கை கைத்தொழில்கள் மூலம் ஆசியாவின் முக்கிய மையமாக பரிணமித்துள்ளது. இதனால் ஏனைய நாடுகள் இலங்கையை நோக்கி முதலீடு மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக வருவதை நாம் காணலாம்.

எமது நாடு தற்பொழுது போட்டித் தன்மை கொண்ட பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர்கின்றது.உள்நாட்டு அபிவிருத்திக்காக பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜனாதிபதியின் செயற்பாடு இன்று எமது பொருளாதார அபிகரிப்புக்கு வித்திட்டுள்ளது. மக்கள் கருத்திட்டங்கள் மூலம் நாட்டின் தேசிய உற்பத்திகளுக்கு தமது உழைப்பை மூலதனமாக இட்டுள்ளனர்.

இது தான் இந்த நாட்டின் தொழிலவர்க்கத்தின் அதிகூடிய பங்களிப்பாகும்.குறைந்த ஆட்பலத்துடன், நவீன இயந்திரங்களின் கையாள்கை குறித்து தொழிலாளர்களுக்கு சிறந்த பயிற்சியளிக்கப்படுகின்றது.இதனை இந்த தொழிற்சாலையும் செய்யவுள்ளதை பார்க்கின்ற பொழுது நான் பெரும் மகிழ்சசியடைகின்றேன்.

இவ்வாறான தொழிற் பேட்டைகள் மேலும் உருவாக்கப்படுவதன் மூலம் அதிகமான தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அரசதுறைக்கு சமமாக தனியார் துறையும் இன்று தனது பங்களிப்பை செய்கின்றது.

இது தான் ஒரு ஜனநாயக நாட்டின் இலட்சனங்களில் ஒன்றாகும். நாட்டின் அபிவிருத்தி மூலம் தான் பிரதேச மக்களின் வாழ்வாதார திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று மேலும் கூறினார். (அ-2)

# போர்க் குற்ற ஆதாரங்களுக்கு உரியோர் பதிலளிக்க வேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து

(கொழும்பு)

இசைப்பிரியா தொடர்பாக புதிய காணொளி வெளியாகியுள்ளது. இதற்கு முன்னாலும் இவர் கைகள் பின்புறமாக கட்டப்பட்ட நிலைமையில் இறந்து கிடக்க காணப்பட்ட புகைப்படங்கள் வெளியாகியிருந்தன.

தற்போது அவர் உயிருடன் படையினரால் பிடிக்கப்பட்டு அழைத்து வரப்படுவதை புதிய காணொளி காட்டுகிறது. இந்த காணொளி ஆதாரம் உலகை உலுக்கியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

இது தொடர்பாக எழுந்துள்ள கேள்விகளுக்கு போரை முன்னின்று நடத்திய தரப்பும், போரை நடத்துவதற்கு அரசுக்கு ஆதரவு அளித்த தரப்பினரும், இன்று அரசிற்கு உள்ளே இருந்தபடி அரசை தாங்கி பிடித்து நிற்கின்ற தரப்பினரும் பொறுப்புடன் பதிலளிக்க கடமைப்பட்டுள்ளனர்

வெளியிடப்பட்டுள்ள காணொளியில் காட்டப்படும் சம்பவங்கள் மிக பாரதூரமானவை. இவற்றை ஒன்றுமில்லையென அரசாங்கம் ஒதுக்கிவிட முடியாது.

இத்தகைய ஆதாரங்கள் படைத்தரப்பினரிடமிருந்து பெறப்பட்டவை என்று ஆதாரங்களை காணொளிப்படுத்திய ஊடக நிறுவனம் கூறுகிறது. இது அடுத்த பாரதூரமான குற்றச்சாட்டாகும்.

பொறுப்புக் கூறல் இலங்கை அரசாங்கத்தின் பிரதான கடப்பாடு என்பதை ஐ.நா. சபை ஏற்கனவே எடுத்து கூறிவிட்டது.

இந்நிலையில் போர்க்குற்ற ஆதாரங்களுக்கு பதிலளிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றார். (அ-2)

# இலவசக் கல்வியை பாதுகாக்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமக்காக உண்மையில் சேவையாற்றும் நபர்கள் யார் என்பதை நாட்டு மக்கள் நன்கு புரிந்து வைத்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இத்தேபான பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள டபிள்யூ. டபிள்யூ.கன்னங்கராவின் சிலை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமக்கு சேவையாற்றும் பிரதிநிதிகளுக்காக குரல் கொடுக்க மக்கள் எப்பொழுதும் தயாராகவே உள்ளனர்.

நாட்டின் இலவச கல்விக்காக கன்னங்கரா ஆற்றிய பணிகள் என்றும் மறக்கமுடியாதவை. இலவசக் கல்வி இருக்கும் வரை நாட்டில் உள்ள சகல பிள்ளைகளும் அவருக்கு கூடன்பட்டவர்களே.

கன்னங்கராவின் இலவச கல்விக் கொள்கையை பாதுகாத்து, அதனை மேலும் அர்த்தமுள்ளதாக முன்னெடுத்துச் செல்ல தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# தங்கம் கடத்த முயன்ற பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஒரு தொகை தங்கத்தைக் கடத்திச் செல்ல முற்பட்ட பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் இருந்து 489 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

சுமார் 24 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான பெண், தனது பயணப் பொதியில் சூட்சுமமாக மறைத்து தங்கத்தை இந்தியாவின் கேரளாவிற்கு கடத்திச் செல்ல முற்பட்ட போது விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-2)



தேசிய மரபுரிமைகள் அமைச்சின் தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினால்2012 ஆம் ஆண்டில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வில் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ்வரும் நூலகங்களின் நூலகர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருது பெற்ற நூலகர்களுடன் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் சரத் எக்கநாயக்க நிற்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:-சிவநகர் செய்தியாளர்)

### பொதுநலவாய மாநாட்டில்

# மன்மோகன் பங்கேற்பது குறித்து இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை

### மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

(புதுடில்லி)

**இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்பது பற்றி இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை என்று மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.**

கொழும்பில் இம்மாதம் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் பொதுநலவாய நாடுகளின் ஜனாதிபதி, பிரதமர் போன்றவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்தியாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையின் இறுதிக் கட்ட போரில நடந்த மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டி, இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் மத்திய அரசை வற்புறுத்தி வருகின்றன.

**தீர்மானம்**

மாநாட்டை முழுமையாக புறக்கணிக்க வேண்டும் என்று தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், இம் மாநாட்டை புறக்கணிக்குமாறு பிரதமர் மன் மோகன் சிங்கிடம் மத்திய மந்திரி ஜி.கே. வாசன் நேரில் வலியுறுத்தியுள்ளார். அதே சமயத்தில், பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்வார் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்நிலையில், மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், டில்லியில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, இம் மாநாட்டில் பிரதமர் பங்கேற்பாரா? என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு அவர் கூறியதாவது,



பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்பது குறித்து மத்திய அரசு முடிவு எடுக்கும். முடிவு எடுப்பதற்கு இன்னும் நேரம் இருக்கிறது. முடிவு எடுக்கும் பணி நடந்து வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் கூறி இருப்பதாக கருதுகிறேன். ஆகவே விரைவில் முடிவு எடுக்கப்படும்.

இதேவேளை இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது ஏராளமான விடுதலைப்புலிகளுடன், அப்பாவி பொதுமக்களும் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்டனர். அப்போது விடுதலைப்புலிகள் அமைப்பின் செய்திப் பிரிவில் இடம் பெற்றிருந்த இசைப்பிரியாவை இராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது.

இந்த காட்சிகள் அடங்கிய வீடியோவை பிரித்தானியாவைச் சேர்ந்த சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் மரியாதை நிமிர்த்தமாக தி.மு.க. தலைவர் கருணாநிதியை நேற்று அவர் இல்லத்தில் சந்தித்தார். அதன்பின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

இசைப்பிரியா இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டமை கண்டிக்கத்தக்கது. இலங்கை போரின் போது மனித உரிமைகளை மீறியதற்கான ஆதாரம் உள்ளது. அதற்கானவிசாரணைகளை இலங்கை எதிர்கொள்ள வேண்டும்.

பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்வது பற்றி இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை. பிரதமர் கலந்து கொள்வார் என்று காங்கிரஸ் உயர் நிலைக்குழு முடிவு எடுத்துள்ளது எனக்கூறுவது தவறு என அவர் கூறினார். (2)

## எதிர்த்தரப்பினர் பங்கேற்காமல் பேச்சுவார்த்தை நடத்தமுடியாது

### லக்தர் பிரஹிமி தெரிவிப்பு

சிரியா உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமாயின் எதிர்த்தரப்பினரும் (கிளர்ச்சியாளர்கள்) பேச்சுவாாத்தையில் இடம்பெற வேண்டுமென்று ஐ.நா. மற்றும் அரபு கூட்டமைப்பின் சிறப்புத் தூதர் லக்தர் பிரஹிமி தெரிவித்துள்ளார்.

சிரியா கிளர்ச்சியாளர்களுக்கும், அரசுக்கும் இடையே ஜெனீவாவில் 2 ஆம் நிலை அமைதி மாநாட்டினை நடத்தும் முயற்சியில் லக்தர் பிரஹிமி ஈடுபட்டுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக கடந்த புதன்கிழமை சிரிய ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தை, லக்தர் பிரஹிமி சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து பெய்ரூட் திரும்பும் முன் டமாஸ்கஸில் செய்தியாளர்களிடம் லக்தர் பிரஹிமி கூறியது,

ஜெனீவா அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க சிரியா அரசு ஒப்புக்கொண்டுள்ளது. சிரியா மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண இந்த மாநாடு பேருதவியாக அமையும்.


அதேவேளையில்இம் மாநாட்டில் சிரியா கிளர்ச்சியாளர்களின் தேசியக் கூட்டணியும் பங்கேற்பது அவசியமாகும். அவர்கள் பங்கேற்கவில்லை எனில் ஜெனீவா மாநாடு நடை பெறாது என்றார்.

ஜனாதிபதி ஆசாத் பதவி விலகினால் மட்டுமே ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்வோம் என சிரியா தேசியக் கூட்டணி அறிவித்துள்ளது. ஆனால் சிரிய அரசு இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

அரபு நாடுகள் மற்றும் மேற்கத்தேய நாடுகளின் நெருக்குதலைத் தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த் தையில் பங்கேற்பதா? வேண்டாமா? என்பது குறித்து எதிர்வரும் 9ஆம் திகதி முடிவு எடுக்க கிளர்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதனிடையே, சிரியாவில் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் இரசாயன ஆயுதங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிடும் என்று ஐ.நா ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (2)

ஜப்பானிற்கு வருகை தந்திருந்த ரஷ்ய வெளியுறவு அமைச்சர் பூயூமோ கிஸாடியா, ஜப்பான் வெளியுறவு அமைச்சர் செர்ஜிலாவர்வ் வைச் சந்தித்தபோது...



## மாநாட்டில் பங்கேற்கத் தடை விதிக்கக்கோரி மனுத்தாக்கல்

(மதுரை)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வதற்கு தடை விதிக்குமாறு கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த நபர் ஒருவரினால் தாக்கல் செய்த மனு விவரம், இலங்கையில் எதிர்வரும் 15 முதல் 17 வரையில் நடைபெறவுள்ள பொதுநலவாய் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் கடந்த மாதம் 24 இல் தீர்மானம் ஒன்றுநிறைவேற்றப்பட்டுள்ளது.

அனைத்து கட்சியினரும் இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இந்த தீர்மானம் மத்திய அமைச்சரவை செயலர், குடியரசுத் தலைவரின் செயலர், நாடாளுமன்றச் செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் 8 கோடி தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மத்திய அரசு முடிவெடுக்க வேண்டும் என மத்திய அமைச்சரவை செயலருக்கு மனு அனுப்பியுள்ளேன்.

இந்த விடயத்திலும் நீதிமன்றம் தலையிட்டு, உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. (2)

### அமெ.உளவு பார்த்தது உண்மை; ஜோன் கெர்ரி ஒப்புக்கொண்டார்

அமெரிக்க உளவு அமைப்புகள் வரம்பு மீறி செயற்பட்டதை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி ஒப்பு கொண்டுள்ளார்.

லண்டனில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் கலந்துகொண்டு அவர் பேசியதாவது:

இலட்சக்கணக்கான மக்களின் தகவல்களை உளவு அமைப்புகள் கண்காணித்ததாக கூறப்படும் செய்திகள் உண்மையல்ல. இதனால் அப்பாவி மக்கள் எவரும் பாதிக்கப்படவில்லை.

எனினும், சில சம்பவங்களில் அமைப்பின் செயற்பாடு வரம்பு மீறியுள்ளதை ஒப்புக்கொள்கிறேன். அதுபோல் எதிர்வரும் காலங்களில் நடைபெற வாய்ப்பில்லை. உளவு அமைப்புகளின் செயற்பாடுகளால் பல விமான விபத்துகள், உயிரிழப்புகள் தடுக்கப்பட்டுள்ளன என்று கெர்ரி தெரிவித்தார். (2)

# அகதிகள் முகாமை மூட நைஜீரியா அரசு உத்தரவு

(நியாமே)

சஹாரா பாலைவனத்தில் இறந்து கிடந்த 92 பேரின் சடலத்தை அடுத்து, வடக்கு நைஜீரியாவின் அகடெஸ் நகரிலுள்ள கெட்டோஸ் என்று அழைக்கப்படும் அகதிகள் முகாமை மூடுமாறு நைஜீரியா அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்கப் பகுதிகளில் வறுமையில் வாடும் மக்கள் ஆண்டுதோறும் மார்ச் முதல் ஓகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு குடிபுக எண்ணி தங்கள் பயணத்தை மேற்கொள்ளுகின்றனர்.

இந்தப் பயணத்தில் இவர்கள் வடக்கு நைஜர் பகுதி அமைந்துள்ள சஹாரா பாலைவனத்தைக் கடந்து அல்ஜீரியா [illegible]பா நாட்டை அடைந்து அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லவேண்டும்.

இவ்வாறு இரண்டு லொறிகளில் கடந்த ஒக்டோபர் மாதம் நூற்றுக்கணக்கான மக்கள் சஹாரா பாலைவனத்தைக் கடந்து செல்ல முற்பட்டபோது இவர்கள் சென்ற லொறிகள் பழுதடைந்து வழியில் நின்றுவிட்டமையால் பாலைவனத்தில் இறங்கி நடக்க முற்பட்ட மக்கள் வழியிலேயே தண்ணீர் வரட்சியினால் இறக்க நேரிட்டது.

இவ்வாறு இறந்து சிதைந்து கிடந்த 52 குழந்தைகள், 33 பெண்கள் மற்றும் 7 ஆண்களின் உடல்களை அண்மையில் நைஜர் அரசு கண்டுபிடித்தது.

இதன் விளைவாக வடக்கு நைஜீரியாவின் அகடெஸ் நகரில் உள்ள கெட்டோஸ் எனப்படும் அகதிகள் முகாமை மூடுமாறு அது உத்தர விட்டுள்ளது.

மனித கடத்தலில் ஈடுபடும் வலைத்தளங்களின் குற்றவியல் நடவடிக்கைகளே இந்தத் துயர சம்பவத்திற்குக் காரணம் என்று அறிவித்துள்ள அரசு இதற்குக் காரணமானவர்கள் கடும்மயாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அறிவிப்பு செய்துள்ளது.

எனவே அந்நாட்டின் பிரதமரான பிரிகி ரபினி இந்தத் துயர சம்பவத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசின் சார்பாக வருத்தத்தைத் தெரிவித்துள்ளார்

மேலும் மூன்று நாட்களுக்கு அரசு துக்கம் அனுஷ்டிக்கும் என்றும் அரச அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

பொ.இளவரசி, பருத்தித்துறை

அன்பின் வியாசரே

நீங்கள் அதிகம் அடிவாங்கியது?

1. பெற்றோர் 2. ஆசான்

3.பொலிஸ் 4.மனைவி

**மேற்கூறிய யாவும் சரியானது.**

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

வியாசரே!

ஒரு பெண்ணால் கல்வியை இழந்த ஒருவன் இன்னொரு பெண்ணின் காதலை ஏற்க முடியாது தவிக்கிறான். இவனுக்கு தாங்கள் தரும் விளக்கம் யாது?

**சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.**

எஸ்.சிறி, அல்லாரை

வியாசர் அண்ணா!

காதலில் தோற்பதும் உண்டு. காதலில் வெற்றி பெறுவதும் உண்டு. ஏன் அப்படி? காதலில் இரண்டு முடிவு இல்லாமல் ஒருமுடிவாக வெற்றி இருந்தால் நல்லதே?

**தோற்க வேண்டும் என்று நேர்த்தி வைத்து விட்டு காதலிப்பவர் பாடு கஷ்டமாய் போய் விடுமே!**




சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே

குரங்கில் இருந்தே மனிதன் தோன்றினான் என்ற விஞ்ஞானபூர்வ உண்மையைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?"

**ஆம் என்று சொல்ல எனக்கும் விருப்பம்தான். ஆனால் குரங்கினம் கோபித்துக் கொள்ளுமே என்ன செய்ய!**

## உங்கள் கனவுக் கன்னி உங்களின் முன் திடீரென்று வந்தால்?

க.கபில்ஸ்ரன்

வியாசர் அண்ணா!

உங்களுக்கு பிடித்த நடிகர் யார்? அக்ஷன் கிங் அர்ஜுனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? தயவு செய்து முழுமையான பதில் கூறவும்.

**நன்றாக நடிப்பவர் யாரோ அவரைப் பிடிக்கும். முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்படுகின்றார்கள் எனவே போரை நிறுத்த வேண்டும் என தென்னிந்திய சினிமா நடிகர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த நிகழ்வில் இந்த அக்ஷன் கிங் கலந்து கொள்ளவில்லை.**

ஜானு

வியாசரே!

உங்கள் கனவுக் கன்னி உங்களின் முன் திடீரென்று வந்தால்?

**ஏற்கனவே எனக்கு ஒரு மனைவி இருப்பதனால் இன்று போய் நீ நாளை கனவில் வா என்று கெ(ா)ஞ்சி அனுப்பி வைப்பேன்.**

## தாய் இறந்தால் தகப்பன் சித்தப்பன் எனும் பழமொழிக்கு என்ன அர்த்தம்.

ரி.விஜி

அன்பின் வியாசரே அண்ணா!

காதலை மறைமுகமாக சொல்லும் ஆண்களின் காதல் உண்மையானதா? இல்லை பொய்யானதா?

**முதலில் மறைமுகமாக காதலைச் சொல்லி பின் மறைமுகமான இடத்திற்கு அழைப்பான். மறந்தும் சென்றுவிடாதே!**

*கொஞ்சம் சிரிங்கப்பா...*




ச.புவித்ரா, சாவகச்சேரி

அன்பின் வியாசர் அண்ணா!

இன்று உலகில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருகின்றது. இதற்கு காரணம் என்ன அண்ணா?

**பஞ்சமா பாதகங்களில் ஒன்றையேனும் அடக்கத் தெரியாத பாதகர்கள் தான்.**

தாரு, கட்டைக்காடு

Mr.வியாசரே!

சிம்பிளா ஒரு சின்ன தத்துவம் சொல்லுங்களேன்?

**சும்மா இருக்கிறபோது அருமை தெரியா. இருட்டு வந்திட்டா முன்னாடி வார எருமை தெரியா.**

கே.எஸ். சிவஞானராஜா, கொககுவில்

வியாசரே!

நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தால்!

**ஜய்யய்யோ வேண்டாமப்பா தாய்மையின் பெருமையை நன்கு அறிந்தவன் நான். அதற்கு எனக்கு தகுதியில்லை.**

எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்

அன்பின் வியாசரே

தாய் இறந்தால் தகப்பன் சித்தப்பன் எனும் பழமொழிக்கு என்ன அர்த்தம். தயவு செய்து சொல்லுங்கள்?

**தாய் இறந்தவுடன் தகப்பன் மறுமணம் செய்திடுவான். மறுமணம் செய்து வரும் பெண், பிள்ளைகளுக்கு சிறியதாய் என்றால் சிறியதாயின் கணவன் யார் சிறிய தகப்பன் தானே.**

# இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறக் கூடாது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இந்திய கடல் எல்லைக்குள் பிரவேசிப்பதைத் தவிர்க்குமாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன இலங்கை மீனவர் சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏற்கனவே இலங்கை மீனவர்கள் 87 பேர் இந்திய சிறைகளில் இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இவர்களில் 75 மீனவர்கள் தமிழகத்திலும் ஏனைய 12 மீனவர்கள் ஆந்திராவிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மீனவர்களின் 16 படகுகளையும் இந்திய பாதுகாப்பு தரப்பினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, இந்திய கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டின் பேரில் இலங்கை மீனவர்கள் 24 பேர் அந்த நாட்டு கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கன்னியாகுமரியில் இருந்து 90 கடல் மைல் தூரத்தில் தூத்துக்குடி கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இலங்கை மீனவர்களை கடந்த 30ஆம் திகதி இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்துள்ளதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை மீனவர்களின் 4 மீன்பிடி படகுகளும் இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மீனவர்களால் பிடிக்கப்பட்ட மீன்கள் மற்றும் அவர்களின் வலைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, மியன்மார் கடல் பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த இலங்கை மீனவர்கள் 12 பேர் அந்த நாட்டு பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது இரண்டு படகுகளையும் மியன்மார் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் தூதரக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளீதாக திணைக்களத்தின் பணிப்பாளர் என்.டி.ஹெட்டிஆராச்சி கூறியுள்ளார்.(அ-2)

# சுயாட்சி அமைப்பதற்கு இடமளிக்க முடியாது

## முதலமைச்சர் தயாசிறி தெரிவிப்பு

சுயாட்சி அமைப்பதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது என வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணம் ஐக்கிய இலங்கைக்குள் இருக்க வேண்டும்.

வடமேல் மாகாண கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,


யாரேனும் நாட்டை பிளவடையச் செய்ய முயற்சித்தால் அந்த முயற்சிகளை முறியடிக்க வேண்டும். நாம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரே இனமாக வாழ்வதன் மூலமே இதனைச் செய்ய முடியும். இலங்கையர்களாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். மாகாண சபைகள் அதிகாரத்தை மீறிச் செயற்படக் கூடாது. சிலரது கருத்துக்கள் நாட்டை மீளவும் பிளவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளன. நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க இடமளிக்கப்பட மாட்டாது. ஜனாதிபதி வடக்கையும் தெற்கையும் ஒரேவிதமாகவே நோக்குகின்றார். 30 ஆண்டு போரை முடிவுறுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)



**நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கரவெட்டி பிரதேசத்தில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்குதலும் மருத்துவ ஆலோசனை வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இதில் பெருந்திரளான மக்கள் கலந்து பயன்பெற்றதுடன் 300 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)**

# வில்வித்தையில் இந்திய அணிக்கு தங்கம்



ஆசிய வில்வித்தை சம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி தங்கம் வென்று அசத்தியது.

18ஆவது ஆசிய வில்வித்தை சம்பியன்ஷிப் தைபோயில் போட்டி நடைபெற்றது. இதற்கான 'காம்பவுண்டு' பிரிவு தகுதிச் சுற்றில் இந்திய அணி, மொத்தம் 2086 புள்ளிகள் பெற்று, முதலிடம் பெற்றது. இதனால், நேரடியாக காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது. காலிறுதியில் ஈராக்கை 231-221 என வென்ற இந்தியா, அரையிறுதியில் தைபே அணியை 232-220 என்ற கணக்கில் வீழ்த்தியது.

இறுதி ஆட்டத்தில் இந்திய அணி பலம் வாய்ந்த கொரியாவை சந்தித்தது. பரபரப்பான போட்டி முடிவில் 233-231 என்ற கணக்கில் வெற்றி பெற்று, தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றது.

# சச்சினை கௌரவிக்க தங்க நாணயத்தில் 'டொஸ்'

கிரிக்கெட்டின் அவதாரம் என்று போற்றப்படும் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுகிறார். மேற்கிந்தியத் தீவு அணிக்கு எதிராக மும்பையில் நடைபெறும் டெஸ்ட் போட்டி அவரது 200ஆவது போட்டியாக அமைகிறது.

ஓய்வுபெறும் டெண்டுல்கருக்கு பிரமாண்ட விழா நடத்த மும்பை கிரிக்கெட் சபை ஏற்பாடுகளை செய்து வருகிறது. இந்த போட்டியில் தங்க நாணயத்தில் நாணயச் சுழற்சி (டொஸ்) செய்யவும் அந்த நாணயத்தில் சச்சின் டெண்டுல்கரின் படத்தை பொறிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் டெண்டுல்கர் படத்துடன் கூடிய விசேட தபால்தலையும் வெளியிடப்படுகிறது. ரசிகர்களுக்கு டெண்டுல்கர் படம் பொறிக்கப்பட்ட தொப்பி, முகமூடி அளிக்கப்படுகிறது. இதை இந்திய கிரிக்கெட் சபையுடன் இணைந்து மும்பை கிரிக்கெட் சபை செய்து வருகிறது.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் டெண்டுல்கர் தனது 199ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறார். அவருக்கு பெங்கால் கிரிக்கெட் சபை சார்பில் ஒரு அடி உயரமுள்ள வெள்ளியிலான மரம் நினைவு பரிசாக வழங்கப்படுகிறது. அதில் 199 வெள்ளி இலைகள் பொருத்தப்படுகிறது.

# தொடரை வென்றது பங்களாதேஷ்




நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், பங்களாதேஷ் அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. இதன்மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 எனக் கைப்பற்றி, முன்னிலை வகிக்கிறது.

பங்களாதேஷ் சென்றுள்ள நியூசிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி 1-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது போட்டி மிர்புரில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (58) நம்பிக்கை தந்தார். பின் வந்த ஷாம்சுர் ரஹ்மான் (25), மோமினுல் ஹக் (31), அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் (31), சோஹாக் காஜி (26), மகமதுல்லா (21) ஆகியோர் ஓரளவு கைகொடுத்தனர். பங்களாதேஷ் அணி 49 ஓவரில் 247ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. நியூசிலாந்து சார்பில் நீஷாம், கோரி ஆண்டர்சன் தலா 4 விக்கெட் வீழ்த்தினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு ரதர்போர்டு (1) ஏமாற்றினார். ரொஸ் டெய்லர் (45), கோரி அண்டர்சன் (37), மில்ஸ் (27*), நாதன் மெக்கலம் (25) ஆகியோர் ஆறுதல் அளித்தனர். அணித் தலைவட்ட பிரண்டன் மெக்கலம் (14), எலியாட் (14), லதாம் (0) சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். நியூசிலாந்து அணி 46.4 ஓவரில் 207 ஓட்டங்களுக்கு சுருண்டு, தோல்வி அடைந்தது.

அடுத்தடுத்து இரண்டு வெற்றியை பெற்ற பங்களாதேஸ் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 எனக் கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது மற்றும் கடைசி போட்டி எதிர்வரும் நவ., 3ஆம் திகதி நடைபெறவுள்ளது. சகல துறை வீரராக அசத்திய பங்களாதேசின் சோஹாக் காஜி, ஆட்டநாயகன் விருதை வென்றார்.

இதன்மூலம் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை இரண்டாவது முறையாக கைப்பற்றியது.

# மைக்கல் கிளார்க்கின் நடவடிக்கைக்கு கண்டனம்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் முதல் தர கிரிக்கெட் போட்டியில், நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நடந்து கொண்டதற்கு, மைக்கல் கிளார்க்குக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.


அவுஸ்திரேலியா டெஸ்ட் அணியின் தலைவராக உள்ளவர் மைக்கல் கிளார்க். இவர், தற்போது நியூ சவுத் வேல்ஸ் அணிக்கு தலைவராக விளையாடி வருகிறார்.

சிட்னியில், நியூ சவுத் வேல்ஸ் அணிக் கும், டஸ்மேனியா அணிக்கும் இடையேயான கிரிக்கெட் ஆட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின்போது, டஸ்மேனியா வீரருக்கு, சந்தேகத்தின் அடிப்படையில் ஆட்டமிழப்பு வழங்கப்படவில்லை.



இதைத் தொடர்ந்து, நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறையை சைகையில் காண்பித்தார் கிளார்க். இப்போட்டியில் டிவிரீப்ளே வசதி இல்லாததால், மறுபரிசிலனை முறையைப் பயன்படுத்த முடியவில்லை. எனினும், மறுபரிசீலனை செய்யும்போது உரிய வகையில் முறையிட வேண்டும். அந்த வகையில், கிளார்க் காண்பித்த சைகையானது விதிமுறையை மீறுவதாகும். இதைத் தொடர்ந்து கிளார்க்குக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தனது தவறை கிளார்க் ஒப்புக்கொண்டார்.

# தர்வரிசையில் சாய்னா பின்னடைவு



கடந்த ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய பூப்பந்தாட்ட நட்சத்திரம் சாய்னா நேவாலுக்கு, இந்த ஆண்டு ஒரு பட்டம் கூட வெல்லவில்லை. கடந்த ஆண்டில் உலக தர வரிசையில் 2ஆவது இடம் வரை முன்னேற்றம் கண்ட சாய்னா இந்த ஆண்டில் தொடர்ந்து சறுக்கி வருகிறார். கடந்த மாதம் தரவரிசையில் 4ஆவது இடம் வகித்த சாய்னா டென்மார்க் ஓபன் பட்டத்தை தக்க வைக்க தவறியதால் 6ஆவது இடத்துக்கு இறங்கினார்.

இந்த நிலையில் சமீபத்தில் முடிந்த பிரெஞ்ச் ஓபன் சுப்பர் சீரிஸ் போட்டியில் 2ஆவது சுற்றுடன் வெளியேற்றப்பட்டதால், சாய்னாவுக்கு மேலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தற்போது வெளியாகியுள்ள புதிய தரவரிசையில் அவர் 7ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

நம் மனச்சாட்சியைக் கொல்லக் கூடாது. அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்.

–சாமுவேல் கால்ரிட்ஜ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பார்த்தசாரதியால் தடுமாறினார் தருமர்! நம் முதல்வர் தடுமாறியது எதனால்?

குருஷேத்திரத்தில் போர் நடந்து கொண்டிருக்கிறது. போர் வியூகங்களை பார்த்தசாரதியாகிய கிருஷ்ண பரமாத்மா வகுத்து நிற்கிறார். உடனுக்குடன் கட்டளைகளைப் பிறப்பித்து கள முனைகளில் பாண்டவர்களின் படைகளைப் பலப்படுத்துவதும் பார்த்தசாரதியின் கடமையாயிற்று.

இந்நிலையில் கௌரவர் சேனையில் உக்கிரமாகப் போர் புரியும் துரோணாச்சாரியாரை கொல்ல வேண்டும். இல்லையேல் பாண்டவர்களின் வெற்றி கடினமாகும்.

வில்வித்தையின் குருவாகிய துரோணரைப் போரில் வீழ்த்துவது கடினம். எனவே முதலில் அவரை உளரீதியாகப் பலவீனப்படுத்த வேண்டும் என கிருஷ்ணன் தீர்மானிக்கிறான்.

இதற்காகப் போர்க்களத்தில் துரோணரின் மகனாகிய அசுவத்தாமா இறந்துவிட்டான் என்றவாறு வதந்தியைப் பரப்புகின்றான்.

செய்தி துரோணரின் காதுகளுக்கு எட்டுகின்றது.

மகன் இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் துரோணர் தளம்பினார். ஆயினும் செய்தியை உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அசுவத்தாமா இறந்த செய்தியை உறுதிப்படுத்த வேண்டுமாயின் போர்க்களத்தின் எதிர்த்தரப்பில் இருக்கக்கூடியவர்களே அதனை செய்தாக வேண்டும்.

துரோணருக்கு எதிர்த்தரப்பு பாண்டவர்கள். எனவே எப்போதும் உண்மையை உரைக்கக் கூடிய தருமனிடம் சென்று என் மகன் அசுவத்தாமா இறந்தது உண்மைதானா? என்பதை அறிந்து வருமாறு துரோணர் தருமரிடம் தூது அனுப்புகிறார்.

நிலைமையைப் புரிந்து கொண்ட கிருஷ்ண பரமாத்மா பொய் சொல்லுமாறு தருமரை வற்புறுத்துகிறார். தருமபிரான் அதை மறுப்பதும் தடுமாறுவதுமாக இருக்கிறார். பார்த்தசாரதி விடுவதாக இல்லை.

அன்றைய போரில், அசுவத்தாமா என்ற பெயருடைய ஒரு யானை இறந்திருந்தது அல்லவா?

எனவே அந்த யானையின் பெயரை உட்படுத்தி (பொய்) சொல் என்று கிருஷ்ணன் வலியுறுத்த அதற்குத் தருமர் இசைகிறார்.

துரோணாச்சாரியார் அனுப்பிய தூதுவன் தருமனிடம் சென்று அசுவத்தாமா இறந்துவிட்டாரா? என்று கேட்க,

தருமரோ! போர்க்களத்தின் எதிர்முனையில் இருக்கும் துரோணருக்கு கேட்குமாறு **அசுவத்தாமா இறந்தது மெய்யே** என்று உரத்தகுரலில் கூறி, யானை என்று மெதுவாகச் சொன்னார்.

தருமர் கூறியதால் அது உண்மை என்று நம்பிய துரோணர் புத்திரசோகம் தாளமுடியாமல் தன் ஆயுதங்களைக் கைநழுவவிட, பார்த்தசாரதியின் பணிப்பில் திருஷ்டத்துய்மன் துரோணரைக் கொல்கிறான்.

பாரதத்தில் தருமர் பொய் சொன்ன இடம் அது.

என்ன செய்வது? போர் என்று வந்துவிட்டால், எப்படியும் வெற்றி பெற வேண்டும் என நினைத்துவிட்டால், மற்றவர்களின் ஆதரவும் தேவை என்ற சூழ்நிலை உருவாகிவிட்டால் தருமரும் தவறிழைப்பார் என்பதுதான் அசுவத்தாமா இறந்ததான பொய்யுரைப்பு.

இப்போது, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கைக்கு வந்தால், வடக்கிற்கு வருமாறு வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் போகக்கூடாது என்று தமிழகம் தணலாகக் கொதிக்க, எங்கள் முதல்வர் ஏன் அப்படி ஒரு அழைப்பை விடுத்தார்?

இலங்கைக்கு வந்தால் வடக்குக்கு வாருங்கள் என்ற அழைப்பு, பொதுநலவாய மாநாட்டுக்கு வாருங்கள் என்பதாகப் பொருள்படக்கூடியது அல்லவா? அத்தகையதொரு நோக்கில் நம் முதல்வர் கூறியிருப்பாரா?

சிலவேளை அசுவத்தாமா இறந்தது மெய்யே என்று கூறிய தருமரின் நிலை, முதல்வர் விக்னேஸ்வரனுக்கும் ஏற்பட்டதா? என்பதுதான் நம் ஏக்கம்.

# அடக்குமுறைக்கு உள்ளாகும் இலங்கை ஊடக சுதந்திரம்

## ஜக்குலின் பார்க் சிட்னியில் தெரிவிப்பு

(சிட்னி)

இலங்கையில் உள்நாட்டு ஊடகங்கள் எவ்வாறு அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றன என்பது தமக்கு எதிரான விசாரணைகளின் மூலம் தெளிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் ஜக்குலின் பார்க் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற சுதந்திர ஊடக அமைப்பு ஒன்றின் கருத்தரங்கில் பங்கேற்றிருந்தபோது சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் ஜக்குலின் பார்க் மற்றும் அதன் உறுப்பினர் ஜேன் வொர்த்திங்டொன் ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் சிட்னி விமான நிலையத்தை சென்றடைந்த பின்னர் இலங்கையில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஜக்குலின் பார்க் சர்வதேச ஊடகவியலாளர் பேரவையுடன் பகிர்ந்து கொண்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இவ்விரு ஊடகவியலாளர்களும் இலங்கையில் கைது செய்யப்பட்டு சுமார் 9 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் சர்வதேச ஊடகவியலாளர் பேரவை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இவ்விரு ஊடகவியலாளர்களும் இலங்கை குடிவரவு சட்டங்களை மீறிச் செயற்படவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச ஊடகவியலாளர் பேரவை சுற்றுலா நுழைவு அனுமதி வழங்குவது தொடர்பிலான இலங்கையின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் சுற்றுலாப் பயணி ஒருவர் கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்பதற்கு தடையில்லை எனத் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை தொடர்பிலான உண்மை நிலைவரங்களை வெளிப்படுத்தப்படுவதனை தடுத்து நிறுத்தும் நோக்குடனேயே அரசாங்கம் இவ்வாறு ஊடகவியலாளர்களை அடக்கு முறைக்கு உட்படுத்தி வருவதாக சர்வதேச ஊடகவியலாளர் பேரவை குற்றம் சுமத்தியுள்ளது.

அதேவேளை இவ்விரு ஊடகவியலாளர்களின் கணனித் தரவுகள் தரவிறக்கம் செய்யப்பட்ட பின்னர் அந்தத் தகவல்கள் அழிக்கப்பட்டதாக சர்வதேச ஊடகவியலாளர் பேரவை தெரிவித்துள்ளது.


இந்நிலையில் இலங்கை ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு குறித்து கவலை வெளியிட்டுள்ள சர்வதேச ஊடகவியலாளர் பேரவை உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த கடந்த இருபது ஆண்டுகளாக சர்வதேச ஊடகப் பேரவை பணியாற்றி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-8)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### ஓம் சிவாய நமவெனத் துதிப்போம்



ஓம்சிவாய நமவெனத் துதிப்போம்
நாம்சிவ மென்றுநெஞ்சில் பதிப்போம்
வீம்பிடும்பை யகங்காரம் விடுவோம்
போம்வினை யென்றுசொல்லித் தடுப்போம்
ஐம்பொறி வழிசெல்லாமல் தடுப்போம்
ஐம்பூதம்நா மல்லவென்று தொடுப்போம்
வெம்பகை விளையாமல் மடுப்போம்
நம்பொருள் சிவமெனப் படிப்போம்


# நல்ல மாற்றங்கள் நிகழ்த்துவதற்கு வாய்ப்புக்களை நாமே உருவாக்குவோம்

இன்று நமக்குத்தரப்படும் வேதாகமப் பகுதியில் "வரிதண்டு வோருக்குத் தலைவராக இருந்த சக்கேயு உளமாற்றம் பெற்றதை தெளிவுபடுத்துகின்றது" வரிதண்டும் துறையில் பெரிய பொறுப்பு வகித்த சக்கேயு மக்களிடமிருந்து அநியாயமாகக் பணத்தை கொள்ளையடித்திருந்தார். இதனால் சக்கேயு மக்களின் வெறுப்புக்கும், கேலிக்கும் ஆளானவர். சமுதாயம் அவரைப் பாவி என்றும், துரோகி என்றும் குட்டிக் கொண்டேயிருந்தது. மக்கள் தனக்குக் கொடுத்திருந்த அடை மொழிகளால், தன் பெயரைத் தானே மறந்து போயிருந்த சக்கேயுவுக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை. ஒருநாள் இயேசுவை சந்திக்கின்றார். இன்னொரு யூதரான இயேசு தன்னைப் பெயர் சொல்லி அழைத்ததும், சக்கேயுவின் மனதைப் பூட்டியிருந்த சிறைகள் திறந்தன. சங்கிலிகள் அறுந்தன. இயேசு அவரை உருமாற்றுகின்றார். அவருக்கு உருமாற்றம் உண்டானது. சக்கேயு புதிய மனிதராக மாறிவிடுகிறார்.

## பரமபிதா காட்டிய பாதை

சக்கேயுவை சந்தித்த இயேசு அவருக்கு உளமாற்றத்தை எற்படுத்தி, வாழ்வையும் தலைகீழாக மாற்றிப் போடுகின்றார். ஒரு மாற்றத்துக்காக இன்று இயேசு எடுத்த முயற்சியை பார்த்தால். இயேசு சக்கேயு ஏறியிருந்த அத்திமரத்தை அண்ணாந்து பார்த்து, அவரை விரைவாய் இறங்கிவர அழைத்ததுதான் முதல்படி. இயேசு தாமாகவே முன்வந்து அவரை அழைத்ததுதான் சக்கேயுவை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. அவருக்கு உளமாற்றத்தை கொடுத்தது. இயேசு எடுத்த இந்த முன்முயற்சியைத்தான் தன்முனைப்பு, தன்னார்வம் என்று சொல்கிறோம். இது ஒரு தலைமைப் பண்பு. நல்ல தலைவர்கள் எப்போதும் தன் முனைப்பு, தன்னார்வம் உடையவர்களாகவும், மாற்றங்கள் தாமாகவே விளையும் என்று காத்துக் கொண்டிராமல், தாங்களாகவே மாற்றத்தை உருவாக்குகிறவர்களாகவும் இருக்கின்றனர். இயேசுவின் தன்முனைப்பை, தன்னார்வத்தை பல சந்தர்ப்பங்களில் பார்க்கிறோம். சக்கேயுவைப் போலப் பலரின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியது இயேசுவின் தன்முனைப்புதான். நாமும் இயேசுவைப் போல ஏன் தன் முனைப்பு உடையவர்களாக, தன்னாரவம் கொண்டவர்களாக, முதல் முயற்சியை நாமே எடுப்பவர்களாக இருக்கக் கூடாது. நல்ல மாற்றங்களை நிகழ்த்துவதற்கு வாய்ப்புகளுக்காகக் காத்திராமல் நாமே ஏன் வாய்ப்புகளை உருவாக்கக்கூடாது. உளமாற்றம் ஒருவரது வாழ்வின் உயர் குறிக்கோளை சரியான பாதையில் மாற்றி அமைக் கிறது. அதனால் பழக்கவழக்கத்திலும் பண்பாட்டிலும், நடத்தையிலும் முழுமையான மாற்றம் உண்டாகிறது. சக்கேயு வாழ்வைத் தொலைத்து வசதி வாங்கியவர். பணத்தைப் பிரதானமாக்கி மனத்தை வனாந்திரமாக்கியவர். தங்க முட்டைக்காக வாத்தை வெட்டியவர் என்று கூட சொல்லலாம். யூதரின் இரத்தம குடித்த பணப்பித்தர். வெறுமையோடு வீங்கிக் கிடந்த அவரது இதயம் கரைதேடும் அலையாய் கடவுளைத் தேடியது. இயேசு அழைத்தார். அதனால் சக்கேயு மனமாற்றம் பெற்றார். வெறுங்குடமான தன்னை அருளால் இயேசு நிரப்பியபோது மனமாற்றம் வந்தது.

திருடி இருந்தால், தீர்ப்பைத் திருத்தியிருந்தால், ஏமாற்றிக் கவர்ந்திருந்தால், ஏய்த்துப் பிழைத்திருந்தால், சோரம் போயிருந்தால், சொத்தை அபகரித்திருந்தால், உறவுகளை ஊனப்படுத்தியிருந்தால், ஊழலின் ஊற்றுக் கண்ணாயிருந்தால், சபலத்தில் சடுகுடு ஆடியிருந்தால் நான்கு மடங்காய் நன்மை செய்து விடுகிறேன் என உறுதியளிக்கிறார். அது நிஜத்தில் கால்பதித்த நெஞ்சத்தின் உயிர்த் தவிப்பு. நான்கு மடங்காய்த் திருப்பித் தருகிறேன்.



இதுதான் மன மாற்றம். பாறைக் குள் பதுங்கியிருந்த பதுமையைப் பக்குவமாய் தட்டி எடுக்கும் அதிசயம்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

முள்ளில் விழுந்த சேலையைக் கிழிபடாமல் எடுக்கும் கலை. எல்லாம் இழந்து இறைவனை மட்டும் பற்றிக் கொள்ளும் இரகசியம்.

சக்கேயு திரட்டிய செல்வம் மக்களிடமிருந்து அநியாயமாகப் பெறப்பட்டது என்பதை ஏற்று அதற்காக மனம் வருந்துகிறார். இவ்வாறு மனம் திரும்பிய சக்கேயு கடவுளை நாடி வந்ததை இயேசு காண்கின்றார்.

சக்கேயு தன்னையே கடவுளின் கைகளில் ஒப்படைக்கிறார். தன்னுடைய வாழ்க்கையைத் திருப்பிப் பார்க்கிறார். தான் செய்த தவறுகளை ஏற்கிறார். இதுவே நம் வாழ விலும் நிகழ வேண்டும். மனிதரின் கடந்த கால வாழ்க்கையில் பல குறைகள் இருந்தாலும், அவர்கள் அக்குறைகளை உணர்ந்ததும் மனம் திரும்பி கடவுளிடம் செல்லும்போது கடவுள் அவர்களை அன்போடு ஏற்றுக்கொள்கிறார்.

அப்போது நம் உள்ளத்தில் கடவுளுடைய உடனிருப்பை உணர்கின்றோம். இதற்கு சக்கேயு சிறந்த உதாரணம். இழந்துபோனதைத் தேடி மீட்க வந்த இயேசு நம்மை இருகரம் விரித்து அழைக்கின்றார். அந்த அழைப்பை மனமுவந்து ஏற்பது நம் பொறுப்பு. எங்களை வரவேற்கக் காத்திருக்கும் இயேசுவை எந்நாளும் நாடி செல்வோம்.

# தனுசுக்கு வந்த 'ஹொலிவூட்' வாய்ப்புகள்



தனக்கு பிரிட்டன், ஸ்பானிஷ் மற்றும் ஹாலிவுட் பட வாய்ப்புகள் வந்ததாக கூறியுள்ளார் தனுஷ்.

தற்போது தமிழில் வேலையில்லா பட்டதாரி, வெற்றிமாறன் இயக்கத்தில் அநேகன் மற்றும் இந்தியில் ஆனந்த் எல்.ராய் இயக்கும் அடுத்த படம் என வரிசையாக படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட தனுஷ், தனக்கு ஹொலிவுட் வாய்ப்பு வந்ததாகவும் ஆனால் நடிக்க மறுத்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

மேலும் பிரிட்டன், ஸ்பானிஷ் மற்றும் ஹொலிவுட் பட வாய்ப்புகள் வந்தது. படத்தின் முழுக்கதையையும் எனக்கு அனுப்பியிருந்தார்கள்.

ஆனால் அச்சமயத்தில் எனக்கு இங்கு படப்பணிகள் நிறைய இருந்ததால் நடிக்க முடியாமல் போய்விட்டது என்று தெரிவித்தார் தனுஷ்.

# 3 மொழிகளில் தயாராகிறது சீரடி பாபாவின் பெருமைகளைக் கூறும் 'சீரடி ஜெய் சாயிராம்'



சீரடி சாய்பாபாவின் பெருமைகளை எடுத்துக் கூற வருகிறது 'சீரடி ஜெய் சாயிராம்' திரைப்படம்.

பி.காமேஸ்வரம்மா வழங்க எஸ்.கே.வி.பிலிம்ஸ் ரு கல்யாண் கல்பா தயாரிக்கும் படம் 'சீரடி ஜெய் சாயிராம்'.

இந்த படம் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் தயாரா கிறது.


மனிதனாக அவதரித்து மகான் ஆன சீரடி சாயிபாபாவின் வாழ்கையில் நடந்த சம்பவங்கள் திரைக்கதையாக்கப்பட் டுள்ளது.

இப்படத்தில் சீரடி சாயிபாபாவாக தாத்தா ரெட்டி என்பவர் நடிக்கிறார். மற்றும் ராஜ்குமார், சத்திவேல், பாலாஜி, நளினிகாந்த், விஜய்குட்டி, பாவனா, நாராயண்ராவ், ரேகா லஷ்மிபாய், லஷ்மாரெட்டி ஆகியோர் நடிக்கிறார்கள்.

இப்படம் குறித்து இயக்குநர் கூறுகையில், இதுவரை பாபாவின் வாழ்க்கையை பதிவு செய்தவர்கள் சொல்லாமல் விட்ட சில சம்பவங்கள் இந்த படத்தில் இடம் பெறுகிறது.

மேலும் வாழ்க்கை இலட்சியமாக பாபா பற்றிய படம் எடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அந்த லட்சியம் இப்போது நிறைவேறி விட்டது என்று பக்தியுடன் கூறியுள்ளார்.

சாகித் படத்திற்கான இசையை வழங்குகிறார்.



# அஜித் நல்ல மனம் கொண்டவர்

'ராஜா ராணி' படம் ஹிட் ஆனதைத் தொடர்ந்து சந்தோசத்தில் சிறகடிக்கும் நயன்தாரா 'ஆரம்பம்' படமும் நல்ல வெற்றியைக் கொடுக்கும் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்.

தனது மார்க்கெட்டை இன்னும் பெரிய அளவுக்குக் கொண்டு போக திட்டமிட்டிருக்கும் நயன்தாரா அஜித்துடன் நடித்தது பற்றி மனம் திறந்து பேசியிருக்கிறார்.


அஜித் நல்ல மனம் கொண்டவர். தன்னுடன் நடிக்கும் சக நடிகர்களை மதிப்பதில் கெட்டிக்காரர். பெரும்பாலும் ஒரு படத்தின் சூட்டிங் ஸ்பாட்டில் முன்னணி ஹீரோ இருந்தால் அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளைத்தான் இயக்குநர் படமாக்குவார்.

அந்த ஹீரோவும் அவருடைய காட்சிகளைத்தான் முதலில் எடுக்க வேண்டும் என்று நினைப்பார். ஆனால், அஜித் அப்படி இல்லை.

மற்ற நடிகர்கள் சம்பந்தப்பட்ட காட்சிகளை படமாக்கி முடிக்கும் வரை அங்கேயே பொறுமையாகக் காத்துக்கொண்டிருப்பார். அவர்கள் நடிக்கும் போது நடிப்பில் குறை தெரிந்தால் அதை சரி செய்ய ஐடியா கொடுப்பார்.

அவரைப் போல நல்ல மனம் கொண்ட ஒரு மனிதரை என் சினிமா வாழ்க்கையில் நான் பார்த்ததே கிடையாது எனப் புகழ்கிறார் நயன்தாரா.

# 10 ஆண்டுகளுக்குப் பின் ஜானகி



கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் தன் மயக்கும் குரலால் ரசிகர்களை வசீகரிக்க வருகிறார் ஜானகியம்மா.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி மொழிகளில் பல்லயிரக்கணக்கான பாடல்களைப் பாடியுள்ளார் ஜானகியம்மா.

17 மொழிகளில் பாடிய ஒரே பாடகி என்ற சாதனைக்கு உரியவர். இவர் தற்போது தமிழில் தனுசுடன் சேர்ந்து மெலடிப்பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.


ஒளிப்பதிவாளர் வேல்ராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் வேலையில்லாப் பட்டதாரி படத்தில் தனுஷ், அமலாபால் ஜோடி சேர்ந் துள்ளனர். இப்படத்தில் அனிருத் இசையில் தனுசுடன் ஜானகியம்மா மெலடி பாடல் ஒன்றைப் பாடியுள்ளாராம். தற்போது 75 வயதாகும் ஜானகியம்மா கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பின்பு பாடும் பாடல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆர்யாவுடன் அசத்திய அனுஷ்கா

இரண்டாம் உலகம் படத்தில் ஆர்யாவை வெளுத்து வாங்கியுள்ளார் அனுஷ்கா.

செல்வராகவன் இயக்கத்தில் ஆர்யா, அனுஷ்கா நடித்துள்ள திரைப்படம் இரண்டாம் உலகம். ஹாரிஸ் ஜெயராஜ் இசைய மைத்துள்ள இப்படத்தின் டிரெய்லர் வெளியிடப்பட்டுள்ளது. இதில் கலந்துகொண்டு பேசிய செல்வராகவன், இனிமேல் பாலிவுட், ஹொலிவுட் என்று சொல்லாதீர்கள், காரணம் இனி தென்னிந்திய சினிமா மட்டும் தான் பேசப்படப் போகிறது.

தமிழில் ராஜமௌலி உட்பட மலையாள இயக்குநர்கள் மற்றும் கன்னடத்தில் சிலர் என்று எல்லோரும் சினிமாவை உலக அளவில் கொண்டு போகப்போகிறார்கள் என்று கூறியுள்ளார். அடுத்ததாக பேசிய ஆர்யா, இந்த படத்தின் உண்மையான ஹீரோ நான் இல்லை அனுஷ்காதான். நான் சொல்றது எந்தளவுக்கு உண்மைன்னு இரண்டாம் உலகம் டிரைலரை பார்த்தாலே புரியும் என்று அனுஷ்காவை பாராட்டியுள்ளார் ஆர்யா.



# ரோகித் இரட்டை சதம்

# கிண்ணத்தை வென்றது இந்தியா





இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஏழாவதும இறுதியுமான கிரிக்கெட் போட்டியில் இந்தியா 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ரோஹித் சர்மாவின் அபார இரட்டைச் சதத்தின் துணையுடன், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஏழாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில், இந்திய அணி 383 ஓட்டங்களை குவித்தது.

தீபாவளியையொட்டி, ஆடுகளத்தில் வான வேடிக்கை காட்டி, கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார் ரோஹித் சர்மா.

அவுஸ்திரேலியாவுக்கு 384 ஓட்டங்கள் என்ற மிகக் கடினமான வெற்றி இலக்கு நிர்ணியிக்கப்பட்டது.

பெங்களூரில் சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி, இந்திய அணியை துடுப்பெடுத்து ஆடுமாறு பணித்தது.

இதன்படி துவக்க ஆட்டக்காரர் ரோஹித் சர்மா அபாரமாக துடுப்பெடுத்தாடி 158 பந்துகளில் 209 ஓட்டங்கள் குவித்து, அணியின் ஓட்ட எண்ணிக்கையை வெகுவாகக் கூட்டினார்.



50 ஓவர்களில் இந்திய அணி ஆறு விக்கெட்டுகளை இழந்து 383 என்ற மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையை எட்டியது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 45 ஓவர்கள் ஒரு பந்தில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 326 ஓட்டங்களை எடுத்து தோல்வியை தழுவியது.


இதன்படி ஏழு போட்டிகளைக் கொண்ட தொடரில் 3-2 என்ற வெற்றிக் கணக்கில் இந்திய அணி கிண்ணத்தை தனதாக்கியது.

**ரோஹித் ஷர்மா உலக சாதனை...**


இந்தப் போட்டியில் சர்வதேச ஒருநாள் போட்டியில் இரட்டைச் சதம் அடித்த மூன்றாவது வீரர் என்ற உலக சாதனையை ரோஹித் சர்மா படைத்தார்.

இவருக்கு முன்பு ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதமடித்தவர்கள் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் மற்றும் வீரேந்திர சேவாக் ஆகியோர் ஆவர்.

அத்துடன், ஒருநாள் போட்டியில் ஒரே இன்னிங்ஸ்சில் அதிக சிக்ஸர்கள் என்ற சாதனையையும் அவர் புரிந்தார். அவுஸ்திரேலியாவின் ஷேன் வோட்சனின் சாதனை இதன் மூலம் அவர் முறியடித்தார்.



## போல்க்னர் சதம் வீண்



# பொலிஸ்-பொதுமக்கள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் மன நிலையை மாற்றும் செயற்றிட்டம் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையுடன் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் தயந்த விஜயசிறி தெரிவித்தார்.

இச் செயற்றிட்டத்தின் மூலம் பொலிஸார் பொதுமக்களுடன் முரண்பட்டுக் கொள்வதனைக் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸாரின் மனநிலையைப் பொதுமக்களோடு ஒன்றிணைப்பதன் மூலம் சாதாரண மக்களின் பிரச்சினைகளையும் பொலிஸாரினால் அறிந்து கொள்ள முடியும்.

2011 ஆம் ஆண்டு தேசிய ஒருமைப்பாட்டு இலாகா அதிகாரிகளினாலும் பொலிஸ் தலைமையகத்தினாலும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இச் செயற்றிட்டம் தற்போது வட பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கே.கே.எஸ். பொலிஸ் பிரிவிற்குள் இச் செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு பரிசீலனை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இச் செயல் திட்டத்தின் மூலம் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களிற்கும் சென்று அவர்களோடு உறவாடி அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்வு வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இதனைவிட அதிகளவான குற்றங்கள் நடைபெறும் இடங்களை இனங்கண்டு அங்கு சென்று விசேட ரோந்துப் பணியிலும் ஈடுபடவுள்ளனர்.

இச் செயற்றிட்டங்கள் தொடர்பில் பொலிஸ்மா அதிப்ருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் பொலிஸ்மா அதிபரின் அறிக்கையின்படி பொலிஸாரின் தவறுகள் திருத்தப்படும்.

இதன்மூலம் பாரிய குற்றங்கள் இடம்பெறுவதை தடுக்க முடிவதோடு அதன் சூத்திரதாரிகளையும் விரைவில் கைது செய்ய முடியும்.

இச் செயற்றிட்டத்தினைவிட பாடசாலை மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

மேலும் வட பகுதியில் இடம்பெறுகின்ற குற்றச்சம்பவங்களை இச் செயற்றிட்டத்தின் மூலம் குறைக்க முடியும் என்பதோடு பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவினை வலுப்படுத்த முடியும் எனவும் அத்தியட்சகர் தெரிவித்தார். (எ-4)

# 13 வாகனங்களுடன் மோதிய உல்லாசப் பயணிகள் பஸ்

## கொஹுவல வீதியில் சம்பவம்

கொஹுவல, பலபொக்குன வீதியில் உல்லாசப் பயணிகள் பயணித்த பஸ் ஒன்று 13 வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து காரணமாக தனியார் பஸ் ஒன்றில் பயணித்த பயணியொருவர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. குறித்த பஸ்ஸில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே இந்த விபத்துக்குக் காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மேற்படி உல்லாசப் பயணிகள் பஸ், கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த மற்றுமொரு பஸ்ஸுடன் மோதியுள்ளது.

இவ்வாறாக மேலும் 12 வாகனங்களுடன் இந்த பஸ் மோதுண்டுள்ளது. இவ்வாறு விபத்துக்குள்ளான வாகனங்களில் இரு பஸ்கள் அடங்குவதுடன் ஏனைய அனைத்தும் கார்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த உல்லாசப் பயணிகள் பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கொஹுவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-8)

# வீதி புனரமைக்...

கும் யாழ்ப்பாணத்திற்குமான போக்குவரத்துத் தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டு விடும்.

எனவே இது தொடர்பில் கவன ஈர்ப்புப் போராட்டத்தை வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளரின் அலுவலகம்முன்பாக நடத்துவதற்கு மண்டைதீவு பொது அமைப்புகள் தயாராகி உள்ளன.

ஒரு சில தினங்களில் இக் கவன ஈர்ப்புப் போராட்டம் இடம்பெறுமென பொது அமைப்புகளின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ந)

# அன்பொளியின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அன்பொளி கல்வியகத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் உயர்பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைசார் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கலாவதி பிரகதீஸ்வரசர்மா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-5)

# வீடு புகுந்து...

வயோதிபர் ஒருவரை மது போதையில் இருந்த அந்த இளைஞர் குழு வெற்று மது பானப்போத்தல்களால் தாக்க முற்பட்டதோடு தகாத வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபட்டுள்ளது.

அதனையடுத்து குறித்த வயோதிபரின் பேரன் அந்த இளைஞர் குழுவை அங்கிருந்து அகற்ற முற்பட்டுள்ளார். இதனால் கோபமடைந்த அந்த இளைஞர் குழு மேற்படி தாக்குதலில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை மேற்படித்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மானிப்பாய் பொலிஸாரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாள்வெட்டுத் தாக்குதலில் சி. சுந்தரமூர்த்தி (வயது 57), எஸ். தவனேஸ்வரி (வயது 45), ரி. அன்னம்மா (வயது 74), எஸ்கிருஷ்ணகுமார் (வயது 23), கே. டிலக்சன் (வயது 15) ஆகியோர் உட்பட 6 பேர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-6-8)

## டில்லிப் பயண ...

பின்னர், "பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி இன்னும் இந்தியா முடிவு செய்யவில்லை" எனத் தெரிவித்தார்.

தமிழகத்தில் சூடுபிடித்துள்ள இந்த விவகாரத்தில் திமுக தலைவர் கருணாநிதி, "இந்தியாவிலிருந்து ஒரு துரும்பு கூட பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கக்கூடாது." என எச்சரித்தார். மேலும், சில தமிழ் நல அமைப்புகள் சார்பில் வேலைநிறுத்தமும் நடத்தப்பட்டது.

இவ்வாறு, தமிழகத்தில் கொந்தளிப்புக் கிளம்பியுள்ள நிலையில் கோத்தபாயவின் டில்லி வரவு, காங்கிரசுக்கு அரசியல் நெருக்கடியை உருவாக்கும் எனக் கருதப்பட்டது.

இது பற்றி டில்லியின் வெளியுறவுத்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்ததாவது,

"தமிழக மீனவர்கள் பிரச்சினை பற்றிப் பேசும் சாக்கில் கோத்தபாய டில்லி வந்து பிரதமர், மத்திய வெளி யுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி ஆகியோரை சந்தித்து, பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தர வலியுறுத்தும் திட்டத்தில் இருந்தார்.

ஆனால், தற்போது தமிழகத்தில் நிலவும் நிலை பற்றிய அவசர அறிக்கை சென்னையில் உள்ள மத்திய உளவுத்துறை சார்பில் அரசுக்கு புதன்கிழமை அளிக்கப்பட் டது. இதை தொடர்ந்து கோத்தபாய தனது பயணத்தை ரத்து செய்ததாக டில்லியில் செய்திகள் உலவுகின்றன .

(எ-8)

## இசைப்பிரியா ...

கள் தொடர்ந்து வலியுறுத்தி வருவது குறித்த கேள்விக்கு பதில் அளித்த சிதம்பரம்,

இறுதி முடிவை எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சு கூறியிருப்பதால், உரிய நேரத்தில் சரியான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (எ-8)

## ஜனாதிபதியின்...

மாறு ஜனாதிபதி உத்தவிட்டதாக அவரின் செயலாளரினால் கூறப்பட்டது என்று நேற்று முன்தினமே செய்திகள் வெளியாகியிருந்தன அத்தோடு இதனை கூட்டமைப்பின் தலைவரும் உறுதிப்படுத்தியிருந்தார்.

ஆனால் ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி நேற்றும் அங்கு வீடுகள் இடிக்கப்பட்டதாகவும் இதுதொடர்பாக இராணுவத்தினரிடம் கேட்டபோது இதனை நிறுத்துமாறு தமக்கு எந்த விதமான அறிவித்தல்களும் வரவில்லை என்றும் அங்கு சென்ற பார்வையிட்ட தன்னிடம் தெரிவிக்கப்பட்டதாகவும்,

இங்கு வீடுகள் இடிக்கப்படுவது அரச உயர் மட்டத்திலிருந்து தமக்கு வழங்கப்பட்ட பொறுப்பு எனவும் இதனை நிறுத்துமாறு இதுவரையில் எந்தவிதமான அறிவித்தல்களும் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார் எனவும்,

அத்தோடு எமக்குரிய அறிவித்தல்கள் வரும் வரையில் இந்த நடவடிக்கைகள் தொடருமென திட்டவட்டமாகத் தெரிவித்த அந்த இராணுவ அதிகாரி இங்கு வந்து எதுவித பலனுமில்லை என்றும் விரும்பினால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுங்கள் எனவும் தெரிவித்ததாக சுகிர்தன் தெரிவித்துள்ளார்.எனபது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## பிரிட்டன் ...

அனுமதிக்கக்கூடாது என்று இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த பிரித்தானிய தமிழர் பேரவையைச் சேர்ந்த சாம் கிருஷ்ணா கூறினார்.

அதுமாத்திரமன்றி ஏனைய நாடுகள் விடயத்தில் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கும் பிரிட்டன், இலங்கை விடயத்தில் மென்மையான போக்கை கடைப்பிடிக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய அமைப்புக்கு என்று இருக்கின்ற விழுமியங்களை இலங்கை மீறுவதாக கூறும் பிரித்தானிய தமிழர் பேரவை, அதனால் அந்த நாட்டை பொதுநலவாய அமைப்பில் இருந்து விலக்கி வைக்க வேண்டும் என்றும் கோருகிறது.

லண்டன் எம் பாங்க் மெண்ட் பகுதியில் ஆரம்பமான தமிழர்களின் இந்த ஊர்வலம் பிரதமரின் அதிகாரபூர்வ டவுணிங் ஸ்ட்ரீட் இல்லம்வரை சென்றது. (எ-8)


**பணியாட்கள் தேவை**

தொலைத்தொடர்பு நிலையத்தில் பணி புரிவதற்கு நல்லொழுக்கம் நற்பண்பு உள்ள பெண் பணியாட்கள் தேவை.
யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.
காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை
செல்வா ரெலிகொமினிக்கேசன்
124, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (பொஸ்கோ பாடசாலை சந்தி)
0777 193 173
(4398)

**வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்**
வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிறி
G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும்.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு: Type <BIT><your name> & send to 772 395 895
(C-5352)

**திருமணத் தேவைக்கான கார் வாடகைக்கு விடப்படும்**
தொடர்புகளுக்கு:
0771950228,
021 222 8984
0776152992

இல.44, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C-5350)

**FRENCH LANGUAGE CENTRE**
FOR BETTER FRENCH
**FRENCH CLASSES**
France,Canada,Belgium செல்வோர், சிறுவர்கள்(9-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.
வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே கடந்த DELF A1 Exam இல் சித்தி... நேரம்,பணம் வீணாகாது 8 மாதத்தில் DELF Exam எழுதலாம்....
ஆரம்பம் : 09.11.13 Sat at 8am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
11.11.13 Mon at 4.30pm. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
Deutsch,IELTS,BI,Sinhala Classes உம் நடைபெறுகிறது...

**KISHOTH**
**Net Browsing Centre**
- Net Browsing (1 Hour) - 50/-
- Skype Call (1 Hour) - 50 /-
- Photo Copy (A4 Both Sides) - 3/-
- Print (A4 Single Side) - 3/-
- I.D.D Call / Fax / Phone Reload
- Scaning / E.mail / Sim Cards / Phone Cards
- Phone Sale / Phone Repairing
- Computer Sale / Computer Repairing

இவை அனைத்தும் ஒரே இடத்தில் உமது காலடியில்
தொடர்பு : கலட்டி பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0217451325, 0771882507
(C-5311)

**Dutch, Deutsch, French**

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.
* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393
(C-5334)

**வேலை வாய்ப்பு**
தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு பல வெற்றிடம் (JS0/LSO/SS0 OTC/VO) 18-55 வயது ஆண் - பெண் இருபாலாருக்கும் கொழும்பு பிரதேசங்களிலுள்ள தனியார் பாடசாலைகள், வைத்தியசாலை, தனியார் நிறுவனம் Food City வங்கி, Hottels போன்ற வெற்றிடம். உணவு + தங்கு மிடம் + சீருடை சகாய விலைகளில். அழையுங்கள்
தொடர்பு: 0777117661, 0775561883
(C-5349)

**நிரந்தர தொழில்வாய்ப்பு**
வாழ்வில் இருள் அகற்றி ஒளி வீசிட... நிரந்தர தொழில் வாய்ப்பு! கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் பல தொழிற்சாலைகளில் பல வெற்றிடம் ஜேம் / கோடியல் / சோஸ் / பிளாஸ்டிக் / இரும்பு ஆணி / கோழி இறைச்சி / டயில் / தேயிலை / PVC போன்ற தொழிற்சாலைகளில் * லேபல் * உற்பத்தி * தரம்பிரித்தல் * களஞ்சியப் பிரிவு / Loading / Unloading பிரிவுக்கு 17-50 வயது. ஆண் - பெண் இருபாலாருக்கும் வெற்றிடம். உணவு + தங்குமிடம் சகாய விலைகளில். சம்பளம் 18000/- 32000/- (நண்பர்கள் + குழு + தம்பதியர் ஒரே தொழிற்சாலைகளில்)
0777117661 / 0775583806
(சி-5347)

**City&Guilds (UK) English Diploma**
CITY & GUILDS APPROVED CENTRE

கடந்த 6 மாதங்களில் 35 மாணவர்களிற்குமேல் City&Guilds(UK) English Diploma (A1,B1) பரீட்சையில் சிறந்த, அதிசிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டுசென்றுள்ளனர்
City&Guilds நிறுவனத்தில் (Colombo) ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள் நடைபெறுகின்றது....
பரீட்சையின் பின்னர் லண்டன் நாட்டின் Diploma சான்றிதழை பெற்று, லண்டன் கல்லூரிகளில் உயர் கல்வியை தொடரமுடியும்.
ஏன் நீங்கள் City&Guilds English இனை தெரிவுசெய்யவேண்டும்???
தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், வங்கிகள், அரசாங்க உத்தியோகத்தில் பணிபுரிபவர்கள் City&Guilds ஆங்கிலத்தினை படிப்பதனூடாக உலகம் முழுவதிலும் அங்கீகாரத்தை பெற்ற DIPLOMA(UK) சான்றிதழை பெற்றுக்கொள்ளமுடியும்.
எமது நிறுவனம் UK நாட்டின் அங்கீகாரத்தினைப்பெற்று தென்மராட்சி மண்ணில் இயங்கிவரும் தனித்துவமான கல்லூரியாகும்.

Gov.Reg No: TN/DS/UC/0324
WORLD EDUCATION CONSULTANCY
No:377,Sangaththanai, Chavakachcheri
T.P: 0779 265447,021 7200 989
சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகமையில்....

அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 04-11-2013 | 09-11-2013 | 11-11-2013 | 16-11-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(சி-5340)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.